# தமிழன்

THAMILAN தமிலன්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 130 குரோதி வருடம், மார்கழி மாதம் 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(20.12.2024) ஹிஜ்ரி 1446, ஜு. ஆகிர் - 18, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12


## மு.கா. தவிசாளர் முழக்கம் மஜீத் காலமானார்



இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீத் (முழக்கம் மஜீத்) காலமானார்.

நீண்டகாலமாக சுகயீனமுற்றிருந்த அவர், சாய்ந்தமருதில் அமைந்துள்ள தனது வீட்டில் நேற்று(19) மாலை காலமானார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் இன்று காலை 09.00 மணியளவில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

## சுகாதாரத்துறைக்கு புதிய நியமனங்கள்

### அரசு தீர்மானம்



சுகாதாரத்துறையில் தாதியர்கள், கதிரியக்கவியலாளர்கள், ஆய்வக அதிகாரிகள், மருந்தாளர்கள் உள்ளிட்டோருக்கு நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு புதிய நியமனங்களை வெகுவிரைவில் வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அதுதொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. » 02 பக்கம்

# இலங்கையின் பொறுப்புக்கூறலை அர்த்தமுள்ளதாக்குக!

## கனேடிய அரசாங்கத்திடம் சிறிதரன் எம்.பி. கோரிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசுக்கு இனியும் கால நீடிப்பும் அரசியல் வெளியும் வழங்காது, குற்றவியல் பொறுப்புக்கூறல் தொடர்பான சர்வதேச விசாரணையை நோக்கி அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் விதத்தில் அடுத்த தீர்மானத்தில் தகுந்த தரமுயர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இலங்கை தொடர்பான தீர்மானங்களைப் பிரேரிக்கும் மையக்குழு நாடுகளிடம் இந்தத் தரமுயர்த்தலை வேண்டுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கும் கனேடிய வெளிவிவகார அமைச்சின் இந்தோ – பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதி அமைச்சர் வெல்டன் எப் உள்ளிட்ட கனேடிய அரசியல் தரப்பினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று(19) கனடா – ஒட்டாவாவில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, சிறிதரன் எம்.பியால், கனேடிய பிரதியமைச்சரிடம் எழுத்துமூல கோரிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த கோரிக்கைக் கடிதத்தின் முழு வடிவம் வருமாறு,... 02 பக்கம்



## ஜனாதிபதி நிதிய நிதி முறைகேடு:

### மிகுதி பெயர்ப்பட்டியல் விரைவில்

''முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலத்திலிருந்தே ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஆட்சியாளர்களின் கணக்குகளுக்கு பணம் பறிமாற்றப்பட்டுள்ளது. பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், மாகாண சபை அமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக் கொண்டுள்ளார்கள். நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்டவர்களின் பட்டியலில் எஞ்சியுள்ளவர்களின் பெயர்களை எதிர்வரும் சில நாட்களில் வெளியிடுவோம்'' என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். » 02 பக்கம்

ජනාධිපති අරමුදල
ஜனாதிபதி நிதியம்
President's Fund

## இந்தியா கூறியதை அவ்வாறே செய்க

### அரசாங்கத்திடம் சுமந்திரன் வலியுறுத்து



''ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி கூறியதைப் போன்று அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்த இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்பதுடன், தற்போது அரசியலமைப்பில் மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களை அவ்வாறே நடைமுறைப்படுத்த வேண்டும். பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் உட்பட 16ஆவது திருத்தத்தில் இருக்கும் மொழி தொடர்பான விடயங்களும் நடைமுறைக்கு... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



***வழமையா எல்லா ஜனாதிபதிமாரும் திருப்பதிக்குத் தானே போவாங்க.. அநுர ஐயா கொஞ்சம் வித்தியாசம் காட்டியிருக்கிறார் கவனித்தீங்களோ?***

## லைக்காமொபைல் பிரிட்டன் ஊழியர்களில் 90 சதவீதமானோர் விரைவில் வேலைநீக்கம்

Lycamobile

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற இரு தேசிய தேர்தல்களிலும் குறிப்பாக பாராளுமன்றத் தேர்தலில் பல்வேறு கட்சிகளுக்கு கோடிக்கணக்கில் பணத்தை அள்ளிவீசியதாகக் கூறப்படும் பிரிட்டனில் வாழும் இலங்கைத் தமிழ் வர்த்தகப் பிரமுகரான அல்லிராஜா சுபாஸ்கரனுக்கு சொந்தமான பெரிய தொலைத்தொடர்பு கம்பனியான லைக்காமொபைலின் ஐக்கிய இராச்சிய ஊழியர்களில் 90 சதவீதமானவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்கு முன்னதாக வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

கம்பனி நிர்வாகத்தினால் இவ்வாரம் வெளியிடப்பட்டிருக்கும் அறிவித்தலின் பிரகாரம் ஐக்கிய இராச்சிய லைக்காமொபைலின் 300க்கும் அதிகமான ஊழியர்கள் தங்கள் வேலைகளை இழக்கப்போவதாக தெரிய வருகிறது.

இது தொடர்பாக பிரிட்டனின் முக்கியமான தினசரி 'த கார்டியன்' உட்பட ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. 02 பக்கம்

## எட்கா விவகாரத்தில் தடம் மாறினார் அநுர

### உதய கம்மன்பில கவலை

''தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எடுத்த தீர்மானத்துக்கமையவும் மக்களின் ஆணைக்கு ஏற்பவும் இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை (எட்கா) தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல மாட்டோம் என்று இந்தியாவுக்கு தெளிவாக அறிவிப்பார் என்றே மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்த ஒப்பந்தத்துக்கு இருதரப்பு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்'' என்று பிவிதுரு ஹெல உருமயவின்... 02 பக்கம்



## பன்றி இறைச்சி குறித்து வீண் அச்சம் வேண்டாம்

### வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆலோசனை

ஆபிரிக்க தொற்றுக்குள்ளான பன்றிகள் இறைச்சியாக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் சுகாதாரப் பரிசோதனைகளை மேற்கொண்டதன் பின்னரே பன்றி இறைச்சி சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாகவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்ட இடங்களில் மாத்திரம் இறைச்சி கொள்வனவு செய்யுமாறும் அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுசிர பிரியசிறி தெரிவித்தார். 02 பக்கம்

## முதலாம் கட்ட வாகன இறக்குமதிக்கு வரையறை

கே.சுபானி

''மூன்று கட்டங்களின் அடிப்படையில் வாகன இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது. இந்நிலையில், வாகன இறக்குமதிக்கான முதலாம் கட்டத்தின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனம் இறக்குமதி செய்யப்பட்ட ரசீது அல்லது சுங்கப் பதிவு தினத்திலிருந்து 90 நாட்களில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்'' என்று நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வரையறை விதித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்,... 02 பக்கம்



## முல்லைத்தீவில் ஒதுங்கிய மியன்மார் நாட்டுப்படகு

### 100க்கும் மேற்பட்ட அகதிகள் மீட்பு

கே.குமணன்

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் மியன்மார் நாட்டு ரோஹிங்யா அகதிகள் சுமார் 100 பேர் அடங்கிய நாட்டுப்படகு ஒன்று நேற்று (19) காலை கரையொதுங்கியுள்ளது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரைப்பகுதியில் மியன்மாரில் இருந்து சுமார் 100க்கும் மேற்பட்ட அகதிகளுடன் நாட்டுப்படகு ஒன்று திசைமாறி வந்துள்ளது. குறித்த படகில் சிறுவர்களும் வயோதிபர்களும் இருந்தனர்.

படகில் இருப்பவர்களுக்கு உணவுகள், உலருணவுகளை முல்லைத்தீவு மீனவர் சங்கத்தினர் வழங்கியுள்ளனர். இந்நிலையில், படகில் இருந்த சிலர் மயக்கநிலையிலும் சுகயீனமுற்றும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, இவர்களை மீட்கும் நடவடிக்கையில் கடற்படையினர், பொலிஸார், பிரதேச மீனவர்கள் ஈடுபட்டதோடு இவர்களை திருகோணமலையிலிருந்து கடற்படை படகு ஒன்று வருகைதந்து அங்கு மீட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுகாதாரத்துறைக்கு...

அதற்கமைய, சுகாதாரத்துறையை போன்று ஏனைய அரச சேவைகளுக்கும் புதிய நியமனங்களை வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''கதிரியக்கவியலாளர்கள் மட்டுமல்லாமல் சுகாதார சேவை, அரச பிரிவுகளுக்கு புதியவர்களை இணைத்துக்கொள்ளும் செயற்பாடுகள் இடைநிறுத் தப்பட்டிருந்தன. அதற்கமைய, தாதியர்கள் முதல் கதிரியக்கவியலாளர்கள், ஆய்வக அதிகாரிகள், மருந்தாளர்கள் உள்ளிட்டோரை நியமிப்பதற்கான அவசியம் இருக்கிறது. இந்த நியமனங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகிறோம். இந்த நியமனங்கள் அரச சேவைக்கு மிக முக்கியமானவையாகும். அதனால் விரைவில் அந்த நியமனங்களை வழங்குவோம்'' என்றார்.

## ஜனாதிபதி நிதிய நிதி...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (19) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக் கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே இதனை தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''1978ஆம் ஆண்டு ஜனாதிபதி நிதியச் சட்டத்தின் அடிப்படையில் 05 வகைகளில் நிதியைப் பெற்றுக்கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டுள்ளது. அவற்றில் இறுதி வகைப்படுத்தலில் சபையினால் தீர்மானிக்கப்படுபவர்களுக்கும் வழங்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இவர்களுக்கு வறுமையை போக்கவோ அல்லது அறிவு வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கவோ சமய மேம்பாட்டுக்காகவோ வழங்கப்பட்டிருக்கும் என்று கருதவில்லை. ஏதாவதொரு சிகிச்சைக்காக ஒரு இலட்சம் அல்லது இரண்டு இலட்சம் ரூபா நிதியை பெற்றுக்கொள்ள மக்கள் எவ்வளவு இன்னல்களுக்கு உள்ளாக வேண்டும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளார்கள். கோரும் நிதி கிடைப்பதும் இல்லை. அதற்கான ஆவணங்களுக்கே பெரிதும் சிக்கலை சந்திக்கவேண்டி ஏற்படும்.

2005 – 2024ஆம் ஆண்டு வரை பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஒருசில அரசியல்வாதிகள் பெற்றுக்கொண்ட நிதி விவரங்களை மாத்திரமே பாராளுமன்றத்தில் வெளியிட்டேன். அதற்கு முன்னர் சந்திரிகா குமாரதுங்கவின் காலத்திலும் இதேபோன்று நிதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. என்னால் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் உள்ளவர்களுக்கு மேலதிகமாக பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தலைவர்கள், மாகாண சபை அமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்டுள்ளார்கள். இது ஒழுக்கவிதிகள் சார்பான பிரச்சினையாகும்.

மக்களின் சுகாதாரம், கல்வி அல்லது வேறு அத்தியாவசிய தேவைகளுக்காக அரச நிதியை வேறு முறையில் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும்போது நெருக்கடி ஏற்படும்போது அதற்கு மாற்றுத் தீர்வாகவே ஜனாதிபதி நிதியம் அமைக்கப்பட்டது. இது மக்களுக்கான நிதியமாகும். இந்த நிதியத்திலிருந்து பணத்தைப் பெற்றுக்கொடுக்கும்போது ஒரு சிலருக்கு 100,000 – 150,000 ரூபா வரையில் பகுதி அடிப்படையில் இல்லாமல் நேரடியாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு நிதியத்திலுள்ள பணத்தை அவர்களுக்குள்ளேயே பகிர்ந்துகொண்டுள்ளார்கள். ஒருசிலருக்கு திறந்த காசோலை, பண காசோலைகளினூடாக பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதுதொடர்பில் மேலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த சம்பவங்கள் தொடர்பான ஆவணங்களை ஜனாதிபதி செயலகம் மற்றும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து தேடிப்பார்க்க வேண்டியுள்ளது. எனவே, இதுதொடர்பில் மேலதிக தகவல்களை எதிர்காலத்தில் வெளியிடக் கூடியதாக இருக்கும். எவ்வாறாயினும் மிகுதியுள்ளவர்களின் அறிக்கையில் எதிர்வரும் சில நாட்களில் வெளியிட எதிர்பார்த்துள்ளோம்'' என்றார்.

## முதலாம் கட்ட...

இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவேண்டும். இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் பதிவு செய்ய முடியாவிட்டால், அவ்வாறான வாகனங்கள் மோட்டார் வாகனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட இறக்குமதியாளர் மோட்டார் வாகனச் செலவு, காப்பீடு மற்றும் இறக்குமதி கட்டணங்கள் மற்றும் தாமதக் கட்டணங்களில் 45 சதவீதத்தை செலுத்த வேண்டும்.

குறித்த இறக்குமதியாளரால் விற்பனை நோக்கத்துக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை இறக்குமதியாளரின் பெயரிலோ, வியாபாரத்தின் பெயரிலோ அல்லது பணிப்பாளர்களின் பெயரிலோ பதிவு செய்யமுடியாது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் வாங்குபவரின் பெயரிலேயே பதிவு செய்யப்படவேண்டும்.

இறக்குமதியாளரொருவர் ஆறு மாதகாலத்துக்குள் இறக்குமதி செய்த மொத்த கார்களில் 25 சதவீதத்தை, வழங்கப்பட்டுள்ள 90 நாட்கள் கால அவகாசத்துக்குள் பதிவு செய்யாவிட்டால், குறித்த இறக்குமதியாளருக்கு 36 மாதங்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்படும். வாகனங்களின் பயன்பாட்டு காலம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும்போது வாகன உற்பத்தி மற்றும் கப்பல் அனுமதிப்பத்திரம் அல்லது விமான அனுமதிப்பத்திரம் என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளின் அடிப்படையில் கணிக்கப்பட வேண்டும். வாகனத்தின் இயந்திரம் பாவிக்கப்படாமல் இருந்தாலும் சக்கரங்கள் பொருத்தப்பட்டு இறக்குமதி செய்யப்படும்போது பாவிக்கப்படாத புதிய வாகனங்களை இறக்குமதி செய்ய வேண்டும். அதிக அளவில் வாகனங்களை இறக்குமதி செய்வதையும் வாகனங்களை பதுக்கி வைப்பதையும் தடுப்பதே இதன் நோக்கமாகும். நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பை பாதுகாக்கும் நோக்கில் இந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## பன்றி இறைச்சி குறித்து...

அதனால், பன்றி இறைச்சியை அச்சமின்றி உணவுக்காக கொள்வனவு செய்ய முடியுமென்றும் இதுதொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவில் சுகாதார நடைமுறைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று (19) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதுதொடர்பில் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலின் காரணமாக பன்றி இறைச்சி உற்பத்தி யில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. பன்றி பண்ணைகளிலுள்ள நோயினால் பன்றிகள் உயிரிழந்தன. பன்றி இறைச்சி உற்பத்தியாளர் களுக்கு பொருளாதார ரீதியான சிக்கலும் ஏற்பட்டது. இந்த தொழிற்றுறையை வழமைக்கு கொண்டுவருவதற்காக அமைச்சினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயினால் இந்த தொழிற்றுறை நேரடியா கவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துவருகிறது. இந்த தொழிலில் ஈடுபட்டவர்கள் பெருந்தொகை கடனையும் பெற்றுக்கொண்டுள்ளனர். வேலைவாய்ப் புகளை இழந்துள்ளனர். இதற்காக நேற்று முன்தினம் விசேட குழு நியமிக்கப்பட்டிருந்தது. அதனடிப் படையில், மிக விரைவில் இந்த தொழிற்றுறையை வழமைக்கு கொண்டு வருவதற்காக பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பன்றி இறைச்சி உணவாகவும் சுற்றுலாத் துறைக்கும் அவசியமாக இருக்கிறது. நாத்தார் பண்டிகை காலத்தில் பொதுவாகவே பன்றி இறைச்சிக்கான நுகர்வும் அதிகரித்தே காணப்படும். பன்றி இறைச்சியை உட்கொள்வது தொடர்பில் அச்சப்பட வேண்டியதில்லை. இதுவரையில், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் ஆரோக்கியமான பன்றி பண்ணைகள் மற்றும் ஆரோக்கியமற்ற பன்றி பண்ணைகள் அடையா ளங்கண்டு வருகின்றன. ஆரோக்கியமற்ற பண்ணைகளிலுள்ள பன்றிகளை முழுமையாக பரிசோதனைக்கு உட்படுத்தி அவற்றை போக்குவரத்து செய்வதற்காக சுகாதார சான்றிதழை பெற்றுக்கொடுப்போம். அதேபோன்று, இறைச் சிக்காக விலங்குகள் கொலை செய்யப்படும் இடங்களின் தரம் தொடர்பில் சுகாதார வரையறைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வரையறைகள் பரிசீலிக்கப்பட்டு, மக்களின் நுகர்வுக்கு பொருத்தமான இறைச்சியை மாத்திரம் சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. சுகாதாரம் உறுதிப்படுத்தப்பட்ட இறைச்சி மாத்திரமே விற்பனைக்காக விநியோகிக்கப்படுகிறது. அந்த இறைச்சியை நுகர முடியும். ஆனால், நோய்க்குள்ளான இறைச்சி அல்லது நோயினால் உயிரிழந்த இறைச்சியை நுகருமாறு நாங்கள் கூற மாட்டோம். பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட, உறுதிப்படுத்தப்பட்ட முறையான இடங்களில் கொள்வனவு செய்யும் இறைச்சியை உணவுக்காக எடுப்பதில் பிரச்சினை ஏற்படாது'' என்றார்.

## எட்கா விவகாரத்தில்...

தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று (19) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது எட்கா உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தையை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டதாக இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையிலான கூட்டு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சகோதரர் அநுரகுமார திசாநாயக்க நாட்டின் பொருளாதாரத்தை இந்தியாவுக்கு பழிகொடுக்கும் எட்கா வேண்டாம் என்று தெரிவித்து மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

அந்த மாநாட்டில் பங்குபற்றி சகோதரர் அநுரகுமார திசாநாயக்கவின் கருத்துகளை செவிமடுத்திருந்தால் எட்கா உடன்படிக்கையினால் நாட்டுக்கு ஏற்படப்போகும் அழிவுகள் குறித்து அவர் நன்கு அறிந்திருப்பார். அதனை கேட்டிருந் தால் எட்கா உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளை முன்னோக்கி கொண்டு செல்ல ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இணங்கியிருக்கவும்மாட்டார்.

ஒருவேளை, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க இருவரும் ஒருவர் என்றால் அன்று கூறிய விடயங்களை ஏன் இன்று நடைமுறைப்படுத்தாமலிருக்கிறார் என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அன்று பொய் கூறி மக்களை ஏமாற்றியது தொடர்பில் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும். எட்கா முதலில் சீபா என்றே அறிமுகப்படுத்தப்பட்டது. சீபா உடன்படிக்கையை விட எட்கா உடன்படிக்கையில் உள்ளடக்கங்கள் குறுகியது என்றாலும் 2008ஆம் ஆண்டு சீபா உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக அப்போதைய ஜனாதிபதி மன்மோகன் சிங் இலங்கைக்கு வந்திருந்தபோது எழுந்த மக்கள் எதிர்ப்பால், சீபா உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நடவடிக்கையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கைவிட்டிருந்தார். அதன் பின்னர் சீபா உடன்படிக்கை எட்கா உடன்படிக்கை என்ற பெயரில் கடந்த 2015ஆம் ஆண்டு பேசுபொருளாக மாறியது. இந்த உடன்படிக்கைக்கு எதிராக தற்போதைய ஜனாதிபதியும் மக்கள் விடுதலை முன்னணியும் அந்த உடன்படிக்கைக்கு எதிரான போராட்டத்துக்கு தலைமைத்துவத்தை வழங்கியிருந்தது. அதில் நாங்களும் பங்குபற்றியிருந்தோம்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இருதரப்பு உடன்படிக்கைகள் அவசியமாகும். அதனை மறுக்கவில்லை. ஆனால், எட்கா உடன்படிக்கையில் பிரச்சினை இல்லை. மாறாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான எட்கா உடன்படிக்கையின் உள்ளடக்கத்திலேயே பிரச்சினை இருக்கிறது. இந்த உடன்படிக்கையினால் ஏற்படும் தேசிய உற்பத்திகள், தொழில்நிபுணர்கள் உள்ளிட்ட துறைசார் சிக்கல்கள் தொடர்பில் பத்து வருடங்களுக்கு மேலாக பேசப்பட்டுள்ளது. இந்த சகல விடயங்க ளையும் தெளிவுபடுத்தியுள்ளபோதிலும் அவற்றை கவனத்திற்கொள்ளாமல் எட்கா உடன்படிக்கையில் கைச்சாத்திட ஜனாதிபதி தொடர்ந்து நடவடிக்கை எடுப்பாராக இருந்தால் மீள திரும்ப முடியாத அழிவை நோக்கி நாட்டை ஜனாதிபதி தள்ளிக் கொண்டிருக்கிறார்.

தேர்தலுக்கு முன்னர் அநுர கூறிய விடயங்களை மக்கள் அனுமதித்ததன் காரணமாகவே இன்று ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐ.எம்.எப். உடன்படிக்கையை மறுசீரமைப்பு செய்வதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தாலும் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையை இருதரப்பு இணக்கமின்றித்திருத்த முடியாது என்று நாங்கள் அறிந்தே வைத்திருந்தோம்.

எனவே, இந்த இணக்கப்பாட்டு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு வேலைத்திட்டமும் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி எடுத்த தீர்மானத் துக்கமைய, மக்களின் ஆணைக்கு ஏற்ப இந்த எட்கா உடன்படிக்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல மாட்டோம் என்று இந்தியாவுக்கு அறிவிப்பார் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்த உடன்படிக்கைக்கு இருத்தரப்பு இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்'' என்றார்.

## இந்தியா கூறியதை...

கொண்டுவரப்படவேண்டும்'' என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை, உடுபிட்டி கிராமமொன்றில் நடத்தப்படும் மதுபானசாலையை மூடவேண்டும் என்று கூறி, அங்குள்ள மக்கள் நீதவான் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்கள். அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த இடத்தில் மதுபானசாலையை நடத்துவது பொதுக் கொள்ளை என்று தெரிவித்து 32 பொது அமைப்புகள் இணைந்து முறைப்பாடு செய்திருந்தன. அந்த விசாரணைகளுக்கமைய வழக்கு ஜனவரி மாதம் 06ஆம் திகதிவரை மேலதிக விசாரணைகளுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆனால், பொதுவாக மதுபானசாலை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் 361 அனுமதிப்பத் திரங்கள் புதிதாக வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் பாராளுமன்றத்தில் அரசாங்கம் தகவல் வெளியிட்டுள்ளது. ஆனால், இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர், மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் கொடுப்பது தொடர்பில் அரசியல் இலஞ்சம் பெற்றுக்கொள் ளப்பட்டுள்ளதாகக் கூறியிருந்தார்கள். பல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசின் பேரில், ஏராளமாக புதிய மதுபானசாலை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்கள்.

அரசியல் இலஞ்சம் என்ற விவகாரத்தை ஆட்சிக்கு வந்து மூன்று நாட்களில் வெளிப்படுத் துவோம் என்றும் கூறியிருந்தார்கள். இரண்டு மூன்று மாதங்களாகியும் யார் யாருக்கு அனுமதிப் பத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன போன்ற விபரம் மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளது. யாருடைய சிபாரிசின் பேரில் இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன என்ற விவரங்களை வெளியிட்டால் மாத்திரமே அரசியல் இலஞ்சம் கொடுக்கப்பட்டது என்ற அவர்களின் முறைப் பாட்டை உறுதி செய்ய முடியும்.

ஆகவே, இலஞ்சம் ஊழல் என சகலவற்றையும் முற்றுமுழுவதாக ஒழித்துவிடுவோம் என்று கூறி பதவிக்கு வந்திருக்கும் இந்த அரசாங்கம், தற்போது இந்த விடயத்தில் பின்னடைவை சந்தித்துள்ளதாகவே தெரிகிறது. எங்களுடைய பிரதேசங்களை பொறுத்தவரையில் கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த இருவர் தாங்களாகவே தாங்கள் சிபாரிசு செய்தோம் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்கள். ஒப்புக் கொண்ட அவர்கள் தாங்களாகவே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் விலகியிருந்தார்கள். இந்த ஒவ்வொரு மதுபானசாலை அனுமதிப்பத்திரமும் யாரோ ஒரு அரசியல்வாதியின் சிபாரிசிலேயே வழங்கப்பட்டுள்ளதாகவே இந்த அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தது. அப்படியானால், அந்தப் பெயர்ப் பட்டியலை அரசாங்கம் வெளியிட வேண்டும். இதுவொரு பாரதூரமான பிரச்சினையாகும். அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் இதனைக் கூறவில்லை. மது பாவனையை ஒழிக்க வேண்டும் என்பதே எங்களின் கொள்கையாகும். மதுபானசாலை அனுமதிப்பத்திரம் விவகாரத்தில் அரசியல் இலஞ்சம் வழங்கப்பட்டதாகக் கூறிவிட்டு அந்த தகவலை வழங்குவதிலிருந்து பின்வாங்குவது என்பது ஊழல் தொடர்பில் இந்த அரசாங்கம் பாரிய சந்தேகமொன்றை எழுப்புகிறது. இவர்களும் இந்த ஊழலுக்கு அடிமையாகிறார்களா, அவர்களுக்கும் இலஞ்சம் கொடுக்கப்பட்டு இந்த தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. தகவல்களை அரசாங்கம் வெளியிடாவிட்டால் அரசாங்கத்தின் மீது பாரிய சந்தேகம் எழுந்துள்ளது.

உங்களுடைய அரசியலமைப்பை முறையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்கு சொல்லுமளவுக்கு ஒரு ஆட்சிமுறை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதாவது, இலங்கைக்கு என்று ஒரு அரசியல மைப்பு இருக்கிறது. அதனை பின்பற்ற வேண்டி யதும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டியதும் இலங்கை அரசாங்கத்தின் கடமை. அதனை இன்னொரு நாட்டு தலைவர் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவ்வாறு கூறுவது என்றால் அது இந்த நாட்டுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும். அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்தாத அரசாங்கமாக இந்த அரசாங்கமும் இருந்து விடப்போகிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

அரசியலமைப்பிலுள்ள சகல விடயங்களையும் முழுமையாக அமுல்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதில் 13 ஆவது அரசியலமைப்பு, 16ஆவது அரசியலமைப்பு என்ற வேறுபாடின்றி சகல திருத்தங்களையும் அமுல்படுத்த வேண்டும். எனவே, அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்தி மற்றையவர்கள் சுட்டிக்காட்டாமல் நடந்துகொள்வதே அரசாங்கத்துக்கு அழகு. மாகாண சபைத் தேர்தல் உடனடியாக அமுல்படுத் தப்பட வேண்டும் என்பதுடன், தற்போது அரசியலமைப்பில் மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களையாவது நடைமுறைப்படுத்த வேண்டும். பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் உட்பட 16 ஆவது திருத்தத்தில் இருக்கும் மொழி தொடர்பான விடயங்களும் நடைமுறைக்கு கொண்டுவரப் படவேண்டும். இந்த நடைமுறைகளை அரசாங்கம் பின்பற்றாவிட்டால் இதுவொரு மாற்றத்துக்கான அரசாங்கமாக கணிக்க முடியாது'' என்றார்.

## இலங்கையின்...

1) தலையாய சர்வதேசக் குற்றமான இன அழிப்புத் தொடர்பான பொறுப்புக்கூறல்

2) இதர சர்வதேசக் குற்றங்களான போர்க்குற்றங் கள், மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள், சித்திரவதை, வலிந்து காணாமலாக்கப்பட்டமை ஆகியவை பற்றிய பொறுப்புக்கூறல்

3) மேற்குறித்த குற்றங்கள் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையில் பல பத்தாண்டுகளாகத் தீர்க்கப்படாது புரையோடிப்போயிருக்கும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை, குறிப்பாகத் தமிழ்ப் பேசும் மக்களின் தனித்துவமான சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் கூட்டாட்சி அரசியலமைப்பொன்றை ஏற்படுத்துவதும் பொறுப்புக்கூறலின் முக்கிய பெறுபேறாக அமைய வேண்டும்.

மேற்குறித்த மூன்று முனைகளில் அர்த்தமுள்ள வகையில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதிலும் மீள் நிகழாமையை உறுதிப்படுத்துவதிலும் பெருந் தொகையாகப் புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளில் முதன்மையான நாடான கனடா நாடானது பின்வரும் வழிகளில் காத்திரமாக உதவவேண்டும் என்று அனைத்து ஈழத்தமிழர் மற்றும் தமிழ்ப்பேசும் மக்கள் சார்பாகவும் வேண்டி நிற்கிறேன்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அண்மைய அறிக்கையின் (A/u/RC/57/19) I உறுப்புரை 68 உபபிரிவு (a) (b) ஆகியவற்றில் பிரேரித்திருப்பவையும் இங்கு நான் முன்வைக்கும் கோரிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் உசாத்து ணையாக அமைந்துள்ளன என்பதையும் தங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இவ்வகையில், அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் தொடர்பாகத் தங்களின் தயவான பார்வைக்கு நான் முன்வைக்கும் கோரிக்கைகள் வருமாறு:

1. தலையாய பொறுப்புக்கூறலுக்குரிய தமிழ் இன அழிப்புக் குற்றம் தொடர்பான இலங்கையின் அரச பொறுப்பை விசாரணைக்கு உட்படுத்துமாறு உலக நீதிமன்றை அணுகுதல்.

2. ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கையாளப்படும் இதர குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் உயர் கட்டத் தரமுயர்த்தலை எதிர்வரும் 60 ஆம் கூட்டத் தொடரோடு மேற்கொள்ளுதல்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் தொடர்பான இறுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் 51/1 (06 ஒக்டோபர் 2022) மேலும் நீடிக்கப்பட்டு, அதன் அடுத்த கட்டமாக 58ஆம் அமர்வில் (பெப்ரவரி-ஏப்ரல் 2025) வாய்மூல அறிக்கையிடலையும் 60ஆம் அமர்வில் (செப்டெம்பர்-ஒக்டோபர் 2025) எழுத்துமூல அறிக்கையிடலையும் மேற்கொள் ளுமாறு மனித உரிமை உயர் ஆணையாளரையும் பேரவைப் பொறிமுறையையும் பணித்துள்ளது.

அதேவேளை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட் டுள்ள சாட்சியங்களைச் சேகரித்துப் பேணும் பொறிமுறையை ஒரு முழுமையான சர்வதேச பக்கச்சார்பாற்ற சுயாதீனப் பொறிமுறையாக (International Impartial and Independent Mechanism, IIIM) ஆகத் தரமுயர்த்துவது மேலும் சிறப்பாக அமையும். போர்க்குற்றங்கள், மனிதத்து வத்துக்கெதிரான குற்றங்கள் போன்றவற்றுக்கும் மேற்சென்று இன அழிப்புக் குற்றங்கள் தொடர்பான குறிப்பான நோக்கு, தாக்குதல்கள் தொடர்பான சாட்சிகளையும் சாட்சியப் பொறிமுறை உள்ளடக்கும் வகையில் அது தரமுயர்த்தப்பட்டால் மேலே குறிப்பிடப்பட்ட முதலாம் கோரிக்கைக்குத் தேவையான சாட்சிகளைத் திரட்டுவதற்கும் அது பெரும் உதவியாக அமையும். இது குறித்த ஆய்வெல்லையைத் தரும் வகையில் அடுத்த தீர்மானம் அமையவேண்டும் அல்லது அதற்கேற்ற உண்மைகளைக் கண்டறியும் ஆணையத்தை நியமிக்கவேண்டும்.

அதேவேளை, ஐ.நா. பாதுகாப்புச் சபையும் பொதுச்சபையும் பொதுச் செயலாளரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல், சர்வதேச விசாரணை குறித்து தீர்க்கமான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைப் பேரவை பரிந்துரைக்கவேண்டும் என்றும் எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் தனது நட்பு நாடுகளின் ஊடாக கனடா இதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் எனது மக்கள் சார்பாக வேண்டிக்கொள்கிறேன்.

3. புதிய அரசியலமைப்பு காத்திரமாக மேற்கொள் ளப்படுவதற்குரிய புதுமையான சர்வதேச மத்தியஸ் துவத்தை ஏற்படுத்த ஆவன செய்தல்.

புதிய அரசியலமைப்பு ஒன்றின் ஊடாக இனப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் பெரும்பாலும் ஒத்துக்கொண்டிருந்தாலும் அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படுகின்றபோது, அது மீண்டும் இறுக்கமான ஒற்றையாட்சித் தன்மை கொண்ட ஒன்றாக அமைந்துவிடும் ஆபத்து உள்ளது என்ற அச்சம் பரவலாகத் தமிழ் மக்களிடையே வேரூன்றியுள்ளது. கடந்த கால அனுபவத்தோடு நோக்குகையில், இது நியாயமான அச்சமே. இவ்வாறான சிக்கலுக்கு மீண்டும் மீண்டும் நாம் ஆளாகாது இருக்கவேண்டுமாயின் தீவிலுள்ள தத்தமக்கான இறைமைக்கும் முழுமையான சுயநிர்ணய உரிமைக்கும் பரிகார நீதிக்கும் உரித்துடைய தேசங்களுக்கும் ஏனைய மக்களுக்கும் இடையே கூட்டு உரிமைகளை உறுதிப்படுத்தும் அரசியலமைப்புக்கு முன்னரான சமூக ஒப்பந்தம் ஒன்று சர்வதேச மத்தியஸ்தத்தோடு மேற்கொள்ளப்பட்டு, அதன் தொடர்ச்சியாக அரசியலமைப்பு உருவாக்கப்படுவதே பொருத்தமாக இருக்கும்.

அந்தவகையில், கனடா நாட்டின் கூட்டாட்சி முறை எமக்கு நம்பிக்கை தரும் ஒரு முன்னுதாரணம் ஆகும். இதைப்போன்ற ஒரு தீர்வை இலங்கைத் தீவிலும் ஏற்படுத்தும் வகையில் ஊக்கமூட்டும் சர்வதேச ஒழுங்குகளை கனேடிய அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் பணிவோடு வேண்டுகிறேன்.

நல்லிணக்க நடவடிக்கைகளையும் பொருளாதார ரீதியான முன்னெடுப்புகளையும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகப் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் தமது பூர்வீகத் தாயகத்தோடு மேற்கொள்வதற்கு ஏதுவாக மேற்குறித்த பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு ஆகியன இன்றியமையாத முதற்கட்ட நடவடிக்கைகள் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

அவர்களின் மகிழ்வான உள நலத்துக்கும் இது நன்மை பயக்கும். பொறுப்புக்கூறலும் அநீதிகள் மீளநிகழாமையும் உறுதிப்படுத்தப்பட்டாலே உரிமையோடு அடுத்த கட்ட பொருளாதார நல்லிணக்க நகர்வுகள் ஆரோக்கியமாக இடம்பெறும் சூழல் எமது தீவில் உருவாகும் என்பதையும் தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டுவருகிறேன். தங்களைச் சந்தித்து இந்தக் கோரிக்கைகளைக் கையளிக்கும் வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு கனேடிய வெளிவிவகார அமைச்சுக்கு மன நிறைவோடு எனது மனமார்ந்த நன்றிகள் – என்றுள்ளது.

## லைக்காமொபைல் பிரிட்டன்...

லைக்காமொபைல் கம்பனி கோடிக்கணக்கில் பெறுமதிசேர் வரியை (வற்) செலுத்தாமல் ஏய்ப்புச் செய்த காரணத்தால் பிரிட்டனின் வருவாய் மற்றும் சுங்கத் திணைக்களத்துடன் பெரும் சர்ச்சைக்குள் ளாகியிருப்பதுடன் அண்மைக்காலமாக நட்டத்தில் இயங்குவதாகவும் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு பெருமளவில் நிதியை வழங்கிவந்த சுபாஸ்கரனின் கம்பனியின் மொபைல் சிம் அட்டைகள், குறைந்த வருமானம் பெறும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் பாரிய கிராக்கியைக் கொண்டிருக்கிறது. இந்த சிம் அட்டைகளை பயன்படுத்தி ஐக்கிய இராச்சியத்துக்குள்ளும் வெளிநாடுகளுக்கும் மிகவும் குறைந்த செலவில் தொடர்பு கொள்ள முடியும். லைக்காமொபைல் கடந்த வெள்ளிக்கிழமை லண்டன் நகரில் உள்ள அதன் தலைமையகத்தில் உள்ள ஊழியர்களுக்கு விடுத்த அறிவிப்பில் கம்பனி பாரதூரமான சவாலை எதிர்நோக்குவதாகவும் 316 ஊழியர்களை வேலையில் இருந்து நீக்கி ஐக்கிய இராச்சியத்தில் வெறுமனே 48 ஊழியர்களுடன் மாத்திரம் இயங்கப்போவதாகவும் கூறியிருக்கிறது.

லைக்காமொபைலுக்கு 2022ஆம் ஆண்டில் 02 கோடியே 40 இலட்சம் ஸ்ரேலிங் பவுண் கள் நட்டமேற்பட்டன. இறுதியாக அந்த ஆண்டுக்கான கணக்கு விபரங்களை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்ததாகவும் கம்பனியின் கணக்கு விபரங்களில் காணப்படும் மழுப்பல்கள் குறித்து கணக்காய்வாளர்கள் விசனம் வெளியிட்டு வந்திருக்கிறார்கள் என்றும் கார்டியன் பத்திரிகை அதன் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறது.

வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்த சிம் அட்டை பக்கேஜுகளுக்காக செலுத்த வேண்டியது என்று கூறப்படும் ஐந்து கோடியே 10 இலட்சம் பவுண்கள் வற் வரியை செலுத்தாத காரணத்தால் பிரிட்டனின் வருவாய் மற்றும் சுங்கத் திணைக்களத்துடன் நீண்டகாலமாக லைக்காமொபைல் தகராறில் ஈடுபட்டிருப்பதாக கூறப்படுகிறது. கடந்த வருடம் லைக்காமொபைலின் பிரான்ஸ் பிரிவு பணச்சலவை செய்தமைக்காகவும் வற் வரியைச் செலுத்தாதமைக்காகவும் பாரிஸ் நீதிமன்றம் ஒன்றினால் ஒரு கோடி யூறோ (83 இலட்சம் பவுண்கள்) அபராதம் விதிக்கப்பட்டது.

வெள்ளியன்று ஊழியர்கள் மத்தியில் உரையாற்றிய கம்பனியின் ஆலோசகர் டேவிட் டொபீ கம்பனியின் இன்றைய நெருக்கடி நிலைக்கு வேறு மொபைல் கம்பனிகளுடனான போட்டாபோட்டி, பணவீக்கம், உள்ளக திறமையின்மை, ஐக்கிய இராச்சியத்தில் உள்ள கம்பனியின் தலைமையகத்துக்கும் இந்தியாவில் உள்ள பிரிவுக்கும் செயற்பாடுகளில் உள்ள முரண்நிலைகள் ஆகியவற்றைக் காரணங்களாகக் கூறினார். ஆனால் அவர் கம்பனியின் வரி தகராறுகள் குறித்து எதுவும் கூறவில்லை.

வாடிக்கையாளர் சேவை போன்ற சில சேவைகள் ஐக்கிய இராச்சியத்தில் நிறுத்தப்பட விருப்பதாகவும் அவை இந்தியா உட்பட வெளிநாடுகளுக்கு மாற்றப்படவிருப்பதாகவும் கூறிய டேவிட் டொபீ ஊழியர்கள் தங்களது கதி குறித்து அறிய சில காலம் எடுக்கும் என்றும் அது குறித்து உடனடியாக கலந்தாலோசனைகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆனால், ஊழியர்களில் எவருமே ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் வேலையில் இருந்து நீக்கப்படமாட்டார்கள் என்று உறுதியளித்ததாக கார்டியன் செய்தி கூறுகிறது.

“லைக்காமொபைலின் உலகளாவிய சேவைக ளின் உத்தேச விரிவாக்கம் கணிசமானளவுக்கு செலவுகளைக் குறைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தப்போகிறது என்று கூறிய அவர் இந்த விரிவாக்கச் செயற்பாடுகளை எதிர்பார்க் கப்படுவதையும் விட சுலபமாக்குவதற்கு ஊழியர் களின் ஆதரவு தேவை என்றும் வேண்டுகோள் விடுத்தார். செய்யப்படவிருக்கும் குறைப்புக்கள் ஊடகங்கள் மற்றும் உணவகத் தொடர்கள் உட்பட லைக்கா கம்பனிகள் குழுமத்தின் பல்வேறு வர்த்தகச் செயற்பாடுகளிலும் பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லைக்கா குழுமத்தின் ஒரு அங்கமான பெல்ல கோசா நிறுவனத்தினால் 2019ஆம் ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தனிப்பட்ட இரவு விருந்துபசாரம் ஒன்றில் கலந்துகொண்ட போறிஸ் ஜோன்சன் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக வருவதற்கான தனது முயற்சிக்கு அல்லிராஜா சுபாஸ்கரனின் நிதியுதவியை நாடியதாக வெளியான செய்திகளை அடுத்து பிரிட்டனின் பிரதமராக இருப்பதற்கு தகுதியற்றவர் என்று ஜோன்சனை தொழிற்கட்சி வர்ணித்திருந்தது. பணச்சலவையில் ஈடுபட்டதாக சுபாஸ்கரனின் லைக்காமொபைல் பிரான்சில் விசாரணைக்கு உள்ளாகியிருந்த வேளையில் அவர் ஏற்பாடு செய்திருந்த இரவு விருந்தில் பங்கேற்பதற்கு ஜோன்சன் தீர்மானித்ததால் அவர் மீதான தொழிற்கட்சியின் விமர்சனம் நியாயமானது என்று அந்த நேரத்தில் பரவலாக நம்பப்பட்டது.

2011ஆம் ஆண்டுக்கும் 2016ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 20 இலட்சம் பவுண்களுக்கும் அதிகமான பணத்தை லைக்காமொபைல் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு வழங்கியது. போறிஸ் ஜோன்சன் லண்டன் மேயராக இருந்த நேரத்தில் அவரின் பிறந்த தினத்தில் சுபாஸ்கரன் 600 பவுண்கள் பெறுமதியான பரிசொன்றை கையளித்தார் என்றும் அதில் மலர்களும் 100 பவுண்கள் பெறுமதியான பொருட்கள் கொண்ட பொதியும் அடங்கும் என்றும் கார்டியன் கூறியிருக்கிறது.

### இ-கடவுச்சீட்டு கொள்வனவு விவகாரம்

# தேசிய கொள்முதல் குழுவின் பரிந்துரைகள் அமைச்சரவைக்கு

(கா.யோசியா)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு ஐந்து மில்லியன் இ-கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனு கோரல் தொடர்பாக தேசிய கொள்முதல் குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டுவர தீர்மானித்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக சட்ட மா அதிபர் நேற்று முன்தினம் (18) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

கடவுச்சீட்டு கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரலை சவாலுக்குட்படுத்தி எபிக் லங்கா தனியார் நிறுவனம் தாக்கல் செய்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மனு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான மொஹமட் லஃபர் தாஹிர் மற்றும் பி. குமாரன் ரத்னம் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பான உத்தரவை அறிவித்த நீதிபதி பி.குமரன் ரத்னம், ஐந்து மில்லியன் - கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்வதற்கு விடுக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவை தொடர்ந்தும் நீடிக்காமலிருக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த விலைமனு கோரல் தொடர்பாக தேசிய கொள்முதல் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பான கடிதம் சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

மேலும், இந்த விலைமனு கோரல் தொடர்பாக தேசிய கொள்முதல் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எழுத்துமூலம் அறிவித்துள்ளதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி நடவடிக்கை எடுக்குமாறு பிரதிவாதிகளுக்கு அறிவித்த நீதிமன்றம், மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஜனவரி 23ஆம் திகதி நடத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

# மத்திய மாகாண அலுவலகங்களில் பாவிக்கப்பட்ட 177 வாகனங்களுக்கு அரச இலச்சினை இல்லை

### கணக்காய்வு அறிக்கையில் தகவல்

(பேராதனை நிருபர்)

மத்திய மாகாண அரச அலுவலகங்களில் 177 வாகனங்கள் அரச இலச்சினைகள் இல்லாமல் பாவிக்கப்பட்டமை கணக்காய்வுத் திணைக்கள அறிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனங்களை பாவித்தவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக பயன்படுத்துவதற்காகவே இவ்வாறு அரச இலச்சினைகள் இல்லாமல் இவ்வாகனங்களை பாவித்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஒட்டுனரின் அட்டவணை அறிக்கையை பரிசோதிக்க தொடங்கியுள்ளனர்.

கணக்காய்வாளர்களின் தேடுதலில் மத்திய மாகாண கைத்தொழில் திணைக்களத்தில் 40 வாகனங்களும் மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தில் 28 வாகனங்களும் மத்திய மாகாண பிரதம செயலாளர் காரியாலயத்தில் 38 வாகனங்களும் மத்திய மாகாண போக்குவரத்து திணைக்களத்தில் 27 வாகனங்களும் ஆளுநர் செயலகத்தில் 07 வாகனங்களும் மத்திய மாகாண போக்குவரத்து அமைச்சில் 11 வாகனங்களும் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சில் 05 வாகனங்களும் கூட்டுறவு அமைச்சில் 06 வாகனங்களும் இவ்வாறு இலச்சினையின்றி பாவிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன. பொதுமக்களின் நிதியை மோசடி செய்ததாக சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்டவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாநகரசபை முன்னாள் உறுப்பினர் ஒருவரின் முறைப்பாட்டையடுத்து, மத்திய மாகாண ஆளுநரால் இது விடயம் தொடர்பில் ஆய்வுசெய்ய கணக்காய்வு திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

எதிர்பாராத விதமாக மத்திய மாகாண ஆளுநர் செயலகத்திலும் இவ்வாறு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டமை கணக்காய்வு அறிக்கை மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரசின் மத்தியகுழு செயற்பாடுகளுக்கு தடைவிதியுங்கள்

### முன்னாள் எம்.பி. சிவமோகன் வழக்குத் தாக்கல்

(வவுனியா நிருபர்)



கட்சியின் யாப்பை மீறி மத்தியகுழு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினருமான சி.சிவமோகன் யாழ்ப்பாண நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்கு சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் ஊடாக யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் (18) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு கூட்டம் கடந்த 14ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் தலைவர் யார் என்ற விடயத்தில் குழப்பநிலை ஏற்பட்டிருந்ததுடன், எதிர்வரும் 28ஆம் திகதி அதனை வாக்கெடுப்புக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தமிழரசுக் கட்சியின் யாப்பு விதிமுறைகளை மீறி மத்தியகுழு எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் யாழ். நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்கு எதிர்வரும் நாட்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கட்சியின் கொள்கைகளை வகுப்பதும் செயற்றிட்டங்களை வகுப்பதும் கட்சியின் பரிபாலனமும் தலைவர் தெரிவும் பொதுச்சபையின் ஆணைக்கு உட்பட்டவை என்று தமிழரசுக் கட்சியின் யாப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கடற்றொழிலாளர் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை என்றால் என்ன? -டக்ளஸ் கேள்வி!

பு.கஜிந்தன்



''இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கையின் ஜனாதிபதி அநுரவுடனான சந்திப்பின்போது கடற்றொழிலாளர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் குறித்த மனிதாபிமான அணுகுமுறை என்றால் என்ன என்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் வினவவுள்ளேன்'' என முன்னாள் கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (19) நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய குறித்த விடயம் தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதியின் அண்மைய இந்திய விஜயத்தின் போது இலங்கை – இந்தியா இடையே கடற்றொழிலாளர்கள் விடயம் தவிர இணக்கம் காணப்பட்ட அல்லது கைச்சாத்திடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை வலுவூட்டியதாகவே அமைந்துள்ளது. அதனடிப்படையில் குறித்த செயற்பாட்டை நான் வரவேற்கின்றேன்.

இதேவேளை, கடற்றொழிலாளர் பிரச்சினைகளில் எதுவிதமான தீர்வுகளும் குறித்த விஜயத்தின்போது எட்டப்பட்டதாக தெரியவில்லை. இதேநேரம் மனிதாபிமான அடிப்படையில் குறித்த விடயத்தை அணுக வேண்டும் என்ற நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறாயின் மனிதாபிமான நிலைப்பாடு என்பது என்ன என்பதே இன்றுள்ள கேள்வியாக இருக்கின்றது. அதாவது இலங்கையின் கடற்பரப்புக்குள் இந்திய மீன்பிடியாளர்கள் வந்து மீன்களை பிடித்து செல்வதற்கும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கை கடற்படையினர் அவர்களை கைதுசெய்யாதிருக்க வேண்டும் என்பதே இந்த மனிதாபிமான நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

ஆனால் எனது நிலைப்பாடு அன்றும் சரி இன்றும் சரி எமது கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக இந்திய மீன்பிடியாளர்கள் உள்நுழைந்து மீன்களை பிடிக்கவோ எமது வளங்களை அபகரிக்கவோ ஒரு வினாடி கூட இடமளிக்கக் கூடாதென்பதாகவே இருக்கின்றது. இதை நான் பொது வெளியிலும் பல தடவைகள் கூறியிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாது, கடந்தகாலம் நான் ஆட்சியில் இருந்தபோது இலங்கை - இந்திய வெளிவிவகார உயரதிகாரிகள் கலந்துகொண்ட கலந்துரையாடலின்போது சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அப்போதும் இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு எந்தவகையிலும் இந்திய சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளுக்கு இடம்கொடுக்க முடியாதென நான் கூறியிருந்தேன் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், தற்போது சிலர் ஊடகங்களில் கூறுவது போன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது கடல் வளத்தையோ கடற்பரப்பையோ இந்திய மீன்பிடியாளர்களுக்கு கொடுப்பதற்கு இடமளிக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பொன்னாலையில் வீடுடைத்து

# திருடியவர்களுக்கு விளக்கமறியல்!

(பு.கஜிந்தன்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை பகுதியில் வீடுடைத்து தளபாடப் பொருட்கள் பலவற்றை திருடிய சந்தேகநபர்கள் இருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வீடுடைத்து திருடியதாக கடந்த 16ஆம் திகதி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. இந்நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இரண்டு சந்தேகநபர்களை கைதுசெய்து விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, இரண்டு சந்தேகநபர்களையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.






இறக்குவானை ஸ்ரீ ஹரிஹர சுதன் ஐயப்ப சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் ஐயப்ப சுவாமிக்கு 18ஆம் படி பூஜையும் ஆசிர்வாத பூஜையும் சபரிமலை மாளிகைப்புரம் சந்நிதியின் மேல்சாந்தி குருமுதல்வர், பிரம்மஸ்ரீ எம்.என். ரெஜிகுமார் நம்பூதரி தலைமையில் இறக்குவானை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் நேற்றுமுன்தினம் (18) இடம்பெற்றது. இதன்போது நம்பூதரி ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றன.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2024 டிசம்பர் 20ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# உலகின் மருத்துவ சாதனைகள் மக்களுக்கானதாக வேண்டும்

2024 ஆம் ஆண்டின் இறுதி நாட்கள் கடந்துகொண்டிருக்கின்றன.இந்த வருடத்தில் உலகளாவிய ரீதியில் பல வேதனையான , சோதனையான நிகழ்வுகள் நடந்தாலும் மருத்துவ உலகில் சாதனையான பல விடயங்களும் அரங்கேறியுள்ளன. அவற்றை குறிப்பிடுவது சாலப்பொருத்தமாக இருக்குமென கருதுகிறோம்.நீரிழிவு மற்றும் புற்றுநோய்க்கான தீர்வுகளே அவை.

புற்றுநோய்க்கான தடுப்பூசியை உருவாக்கி உள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சந்தையில் அறிமுகமாகவுள்ள இந்த தடுப்பூசி கட்டணமின்றி கிடைக்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

புற்றுநோய்க்கான எம் ஆர் என் ஏ தடுப்பூசியை உருவாக்கியுள்ளதாக ரஷ்ய நாட்டின் சுகாதாரத் துறையின் கதிரியக்க மருத்துவ ஆராய்ச்சி மைய இயக்குனர் எண்ட்ரே கப்ரின் தெரிவித்துள்ளார். இந்த தடுப்பூசி நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தடுப்பூசியின் மருத்துவ பரிசோதனையில் புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு கட்டி (ட்யூமர்) வளர்வதை தடுப்பதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த ஆண்டின் தொடக்கத்தில் (பெப்ரவரி) ரஷ்ய ஜனாதிபதி புட்டின், புற்றுநோய் தடுப்பு மருந்து உருவாக்கத்தை கிட்டத்தட்ட நெருங்கி விட்டதாக தெரிவித்திருந்தார். இந்த சூழலில் தற்போது அது குறித்து ரஷ்யா அறிவித்துள்ளது.

இந்த தடுப்பூசியின் பெர்சனலைஸ்ட் உருவாக்கத்தில் எம்ஆர்என்ஏ சார்ந்து மேட்ரிக்ஸ் கணக்கு மேற்கொள்ள ஏஐ உதவியை நாடியுள்ளதாகவும் தகவல். இவன்னிகோவ் கல்வி நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு திறன் கொண்ட நியூரல் வலையமைப்பு கம்ப்யூட்டிங் மூலம் ஒரு மணி நேரத்தில் இந்த கணக்குகளை மேற்கொண்டு அதற்கு தகுந்த வகையில் புற்றுநோய் தடுப்பூசியை உருவாக்கலாம் என அலெக்சாண்டர் ஜின்ட்ஸ்பர்க் தெரிவித்துள்ளார். புற்றுநோய்க்கான தடுப்பூசிகள் நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தூண்டுவதன் மூலம் புற்றுநோய் பாதிப்பு கொண்ட செல்களை அடையாளம் கண்டு அழிக்கும் பணியை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியை புதுமைமிக்க செல் தெரபி முறையின் மூலம் முழுமையாகக் குணப்படுத்தி மருத்துவ உலகில் சாதனை படைத்துள்ளனர் சீன விஞ்ஞானிகள்.

ஷாங்காய் சாங்ஜெங் மருத்துவமனை (Changzheng Hospital), சீன அறிவியல் கழகத்தின் மாலிக்கியூல் செல் சையின்ஸ் பிரிவின் சிறப்பு மையம் மற்றும் ரெஞ்சி மருத்துவமனை ஆகியவற்றைச் சேர்ந்த குழுவினரால் உருவாக்கப்பட்ட இந்த சிகிச்சை முறை, செல் டிஸ்கவரி (Cell Discovery) என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சவுத் சீன மார்னிங் போஸ்ட் செய்தித் தகவலின்படி, 2021ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் செல் டிரான்ஸ்பிளான்ட் அறுவை சிகிச்சை சீனாவை சேர்ந்த ஒரு நோயாளிக்கு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிடத்தக்க வகையில், பதினொரு வாரங்களுக்குள் அவர் இன்சுலின் ஊசி போடுவதை நிறுத்திக் கொண்டார். அதைத் தொடர்ந்து ஒரு வருட காலத்தில், இரத்த நீரிழிவு அளவைக் கட்டுப்படுத்தி, வாய்வழியாக மருந்துகளை உட்கொண்ட நிலையில், அதன் அளவையும் படிப்படியாகக் குறைத்து இறுதியில் மொத்தமாக மருந்தை நிறுத்திக் கொண்டார்.

மேலும் இந்த சிகிச்சையின் தொடர் ஆய்வுகள் நோயாளியின் கணைய திசுக்கள் (pancreatic islet function) திறம்பட மீட்டெடுக்கப்பட்டது என்பதைக் காட்டின என்று ஆய்வுக் குழுவின் ஆராய்ச்சியாளர்களில் ஒருவரான யின் (Yin) தெரிவித்தார். தற்போது 33 மாதங்களாக அந்த நோயாளி இன்சுலின் ஊசி இல்லாமல் ஆரோக்கியமாக இருக்கிறார் என தெரிவித்துள்ளார்.

நீரிழிவு என்பது உணவை ஆற்றலாக மாற்றுவதில் உடலின் திறனைப் பாதிக்கும் நோய். இதை சரியாக கையாளாவிட்டால், கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும். பாரம்பரிய சிகிச்சை முறைகளில் இன்சுலின் ஊசி போடுதல், மருந்துகளை எடுத்துக்கொள்ளுதல் ஆகியவற்றுடன் தொடர் கண்காணிப்பு ஆகியவை இருக்கும்.

இந்த நிலையில் சீனாவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த புதிய செல் சிகிச்சை முறை உண்மையில் பல கோடி மக்களைக் காப்பாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிகிச்சை செலவுகள் அதிகமாக இருக்கும் என்றாலும், நீரிழிவு நோய்க்கு முழுமையான தீர்வு என்பது மருத்துவத் துறையில் புதிய புரட்சியை உருவாக்கக் கூடிய ஒன்று.

புதிய செல் சிகிச்சை முறை என்பது, நோயாளியின் peripheral blood mononuclear cell-கள் மறுபடியும் வடிவமைத்து, அவற்றை “விதை செல்கள்” (seed cells) ஆக மாற்றி செயற்கையான சூழலில் கணைய திசுக்களை மீண்டும் உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டது. மறுசீரமைப்பு மருத்துவம் (regenerative medicine) எனப்படும் புதிய சிகிச்சை அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆண்டுதோறும் 2 ஆயிரத்து 500 மார்பக புற்றுநோயாளர்கள் உட்பட சுமார் 17 ஆயிரம் அனைத்து வகையிலான புற்றுநோயாளர்கள் புதிதாக இனங்காணப்படுகின்ற அதேவேளை, 13 ஆயிரம் புற்று நோயாளர்கள் மரணமடைகின்றார்கள் என்ற தகவல் இருக்கிறது. இலங்கை தேசிய புற்றுநோய் பதிவகத்தில் வருடமொன்றுக்கு 17,000 பேருக்கு புற்றுநோய் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. புற்றுநோய் ஏற்பட்ட இலங்கையர் மத்தியில் மிகப் பொதுவான புற்றுநோய்களான வாய்ப்புற்றுநோய், கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் போன்றவற்றுக்கு அடுத்தபடியாக மார்பகப் புற்றுநோய் உள்ளது.

என்றாலும் பல சந்தர்ப்பங்களில் புற்றுநோய்கள் வயது வந்தவர்களுக்கே அதிகம் ஏற்படுகின்றது. சில நேரங்களில் பருவ வயதினருக்கும் புற்றுநோய் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பல நிரூபிக்கப்பட்ட புற்றுநோய்களுக்கான ஆபத்துக்காரணிகள் வளரிளம் பருவத்திலேயே ஆரம்பிக்கின்றது. அடுத்ததாக உலக மக்கள் தொகையில் சற்றேறக்குறைய பதினொரு பேரில் ஒருவர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இன்சுலினின் உணர்திறன், உடல் பருமன், அதிகக் கொழுப்புப் படிவு, உயர் இரத்த அழுத்தம், புகையிலை நுகர்வுகள், மதுப்பழக்கம் போன்றவை காரணிகளாக அமைகின்றன.

இலங்கையில் நடத்தப்பட்ட தேசிய ஆய்வில், ஆசியாவில் இலங்கையிலேயே நீரிழிவு நோயின் அதிக வீதம் இருப்பதாகவும் வயது வந்தவர்களில் நான்கு பேரில் ஒருவர் இந்த நோயுடன் கண்டறியப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

உலகத்தின் இந்த மருத்துவ சாதனை பல உயிர்களை காப்பாற்றும். மக்களை வாழவைக்கும். ஆனால் ஏழை எளிய மக்கள் இவற்றை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அவற்றின் விலை இருக்குமா என்பதில்தான் அதன் மகத்துவமும் தங்கியிருக்கிறது.

## இன்றைய நாளில்...

- 1844 – இலங்கையில் அடிமை முறையை முற்றாக ஒழிக்கும் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.
- 1917 – சோவியத் ஒன்றியத்தின் முதலாவது இரகசிய பொலிஸ் துறையான ‘சேக்கா’ அமைக்கப்பட்டது.
- 1943 – பொலிவியாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1951 – அணு ஆற்றலினாலான மின்சாரம் முதல் தடவையாக அமெரிக்காவில் ஐடஹோ மாநிலத்தில் பிறப்பிக்கப்பட்டது. இது 4 மின்குமிழ்களை எரிக்கப் பயன்பட்டது.
- 1955 – கார்டிஃப் வேல்ஸின் தலைநகரமாக அறிவிக்கப்பட்டது.
- 1957 – போயிங்-707 விமானம் தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டது.
- 1971 – ‘எல்லைகளற்ற மருத்துவர்கள்’ என்ற தன்னார்வ அமைப்பு பாரிஸ் நகரில் தொடங்கப்பட்டது.
- 1988 – போதைப்பொருள் கடத்தலுக்கெதிரான ஐ.நா. சாசனம் வியன்னாவில் கையெழுத்திடப்பட்டது.

1999 – மக்காவு போர்த்துக்கலிடம் இருந்து சீனாவிடம் கைமாறியது.

2000 – மிருசுவில் படுகொலைகள்: யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் 3 வயதுக் குழந்தை உட்பட 8 பொதுமக்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.




### 01. பண்டங்கள், வேலைகள் மற்றும் ஆலோசனையல்லாத சேவைகள் ஆகியன பற்றிய பெறுகை வழிகாட்டல்கள் – 2024

அரசியலமைப்பின் 156ஆ(1) இன் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ள தேசிய பெறுகை ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்பின் 156இ(1) இன் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அனைத்து அரச நிறுவனங்களாலும் பண்டங்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நியாயமான, ஒப்புரவான, வெளிப்படையான, போட்டியான மற்றும் செலவுத்திறனான நடவடிக்கை முறைகளையும் வழிகாட்டிநெறிகளையும் வகுத்தமைத்தல் குறித்த ஆணைக்குழுவின் பணிகளாகும்.

அதற்கமைய, தயரிக்கப்பட்டுள்ள அனைத்து அரசாங்க நிறுவனங்களின் பெறுகைக்கான பண்டங்கள் மற்றும் சேவைகள், வேலைகள், ஆலோசனையல்லாத சேவைகள் ஆகியவற்றுக்கும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களுக்கும் அவற்றின் இடைநேர் விளைவான விடயங்களுக்கான வழிகாட்டல்கள் - 2024, 2412/01 ஆம் இலக்க 2024.11.25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த வழிகாட்டிநெறிக் கோவையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. அரசுக்குச் சொந்தமான வர்த்தக ரீதியற்ற நிறுவனங்கள் தொடர்பான மீளாய்வு

அத்தியாவசிய பொதுச் சேவைகள் வழங்கல், தேசிய பாதுகாப்பு மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாத்தல், பல்வேறு ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ளல், பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கலுக்குரிய சந்தை நடவடிக்கைகளில் இடையீடு செய்தல், வளங்களை நியாயமாக பகிர்ந்தளித்தல், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் சமுதாய நலன்புரிகள் போன்ற முக்கிய பணிகள் அரசுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக பாதுகாப்பு மற்றும் பொலிஸ் தவிர்ந்த 86 திணைக்களங்கள், 25 மாவட்டச் செயலகங்கள் மற்றும் 339 பிரதேச செயலகங்கள், அரசுக்குச் சொந்தமான 340 தொழில்முயற்சிகள் மற்றும் வர்த்தக ரீதியற்ற 115 நியதிச்சட்ட நிறுவனங்கள் தற்போது இயங்கிவருகின்றன. தேசிய வரவு - செலவு திட்டத்தின் கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்ற வர்த்தக ரீதியற்ற 115 அரச நியதிச்சட்ட நிறுவனங்களுக்காக மற்றும் அரச தொழில்முயற்சித் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற 51 நிறுவனங்களுக்காக 2021ஆம் ஆண்டில் தேசிய வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் 140 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் குறித்த நிறுவனங்கள் இற்றைப்படுத்தப்படாமை, ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானதாக இன்மை அல்லது பொருத்தமின்மை, குறித்த நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் தனியார் துறையினரால் மிகவும் வினைத்திறனான வகையில் மேற்கொள்ளப்படல் மற்றும் ஒரே ஒத்த பணிகளை மேற்கொள்கின்ற நிறுவனங்கள் ஒருசிலவும் காணப்படுகின்றமை போன்ற விடயங்களால் அரசுக்குச் சொந்தமான வர்த்தக ரீதியற்ற நிறுவனங்கள் தொடர்பாக மீளாய்வு மேற்கொள்வது காலத்தின் தேவையாகவுள்ளது. அதற்கமைய அவ்வாறான மீளாய்வை மேற்கொண்டு விதந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. டிஜிட்டல் அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வெற்றிகரமான டிஜிட்டல் தீர்வுகளைப் பரிமாற்றம் செய்கின்ற ஒத்துழைப்புகள் தொடர்பாக இந்திய அரசு மற்றும் இலங்கை அரசுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் புத்தாக்கத்தில் முன்னணி வகிக்கின்ற இந்திய இலத்திரனியல் - அரச நிர்வாகம், நிதித் தொழில்நுட்ப முறைமை, செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளில் பெற்றுக்கொண்டுள்ள விசேட நிபுணத்துவ அறிவு பலவித செயற்பாடுகள் மூலமாக இலங்கையில் டிஜிட்டல் அபிவிருத்திக்குப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை கிட்டியுள்ளது.

அதற்கமைய, இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தை டிஜிட்டல் பொருளாதார அமைச்சு மற்றும் இந்தியாவின் இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு இருதரப்புகளுக்குமிடையிலான ஆரம்ப உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அதன்மூலம், டிஜிட்டல் அபிவிருத்தித் துறையில் அதிகாரிகளின் இயலளவு விருத்திக்கும் மற்றும் டிஜிட்டல் அபிவிருத்தித் தீர்வுகளை நடைமுறைப்படுத்தும்போது இரு நாடுகளுக்குமிடையிலான நிறுவன ரீதியான ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான இயலுமை கிட்டியுள்ளது.

அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. இலங்கை பொலிஸுக்கான வாகனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்திய அரசால் வழங்கப்படுகின்ற நிதியுதவி

இலங்கை பொலிஸுக்கான வாகனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்திய அரசால் இலங்கைக்கு 300 மில்லியன் இலங்கை ரூபா நிதியை நன்கொடையாக வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த நன்கொடையைப் பயன்படுத்தி வடமாகாணத்தின் பொலிஸ் நிலையங்களின் நடவடிக்கைகளுக்குத் தேவையான கெப் வாகனங்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த நன்கொடையைப் பெற்றுக்கொள்வதற்காக இருதரப்புகளுக்குமிடையிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக உயர் பாரம்பரிய பால் மாடுகளை இறக்குமதி செய்தல்

உயரிய தரத்திலான மரபணு இயலுமைகளைக் கொண்டுள்ள பால் மாடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2023 மற்றும் 2024 ஆகிய இரு ஆண்டுகளில் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும் குறித்த பெறுகைச் செயன்முறையைக் கடைப்பிடிப்பதில் மேலெழுந்துள்ள பிரச்சினைகளால் தேவையான பால் மாடுகளை விநியோகிப்பதற்கு இதுவரைக்கும் இயலாமல் போயுள்ளது. அதனால் நேரடியாக இரண்டு அரசுகளுக்கிடையே மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களாகப் பொருத்தமான கறவை மாடுகளைக் கொள்வனவு செய்வதற்கான இயலுமை தொடர்பாக நாடுகள் சிலவற்றிலிருந்து தகவல்கள் கேட்டறியப்பட்டுள்ளதுடன், பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் இடையீட்டின் கீழ் பாகிஸ்தான் வணிக அபிவிருத்தி அதிகாரசபையால் சஹிவால் (Shahiwal மற்றும் நிலிரவி (Niliravi) வகைகளைச் சார்ந்த ஏழு (07) சுக்கிலவிருத்தி கிடாரி சினை மாடுகளை எமது நாட்டுக்கு வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சுக்கிலவிருத்தி கிடாரி சினை மாடுகளை இறக்குமதி செய்து சுக்கிலங்களை விருத்தி செய்யும் வரைக்கும் சஹிவால் வகையைச் சார்ந்த 20,000 சுக்கில சினைகளை இந்தியாவின் தேசிய பால் அபிவிருத்திச் சபை மூலம், அரசுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களாகக் கொள்வனவு செய்வது பொருத்தமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை அரசு மற்றும் பாகிஸ்தான் அரசுகளுக்கிடையில் சஹிவால் இனத்தைச் சேர்ந்த ஐந்து (05) பால் மாடுகள் மற்றும் நிலிரவி இனத்தைச் சேர்ந்த இரண்டு (02) இனையும் கொள்வனவு செய்வதற்கும் 20,000 சுக்கில சினைகளை இந்திய பால் அபிவிருத்திச் சபையின் அரசுகளுக்கிடையிலான கொள்வனவாகப் பெற்றுக் கொள்வதற்கும் விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 2025 ஆம் ஆண்டுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் பிறபொருட்களைக் கொள்வனவு செய்தல்

உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், புதிய டயர்களை விநியோகித்தல், பிராந்தியங்களுக்கான டயர் பொருத்தும் சேவைகளை வழங்கும் நிறுவனத்தைத் தெரிவு செய்தல், கிறீஸ் மற்றும் உராய்வு எண்ணெய் விநியோகித்தல் மற்றும் புதிய இயந்திரங்களை விநியோகித்தல் உள்ளிட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கான 2025 ஆம் ஆண்டுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான பெறுகையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறித்த பெறுகைகளில் நான்கு (04) பெறுகைகள் அமைச்சின் பெறுகைக் குழு அங்கீகார எல்லையைக் கடந்து செல்வதால் குறித்த பெறுகை நடவடிக்கைகளை அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவுக்கு ஒப்படைக்க வேண்டியுள்ளது.

அதற்கிணங்க, குறித்த பெறுகையை வேறுவேறாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவும் குறித்த நான்கு (04) பெறுகைகளுக்கும் வேறுவேறாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் 04 இனை நியமிப்பதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. நீர் வழங்கல் மற்றும் சுகாதார நலத்தை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்தின் எஞ்சியுள்ள வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேலதிக நிதியொதுக்கீடு செய்தல்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் நுவரெலியா போன்ற 07 மாவட்டங்களில் 540 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை இலக்காகக் கொண்டு குழாய் நீர் சேவைகளுக்கான அணுகல்களை அதிகரிப்பதற்கும் சுகாதாரநல வசதிகளை மேம்படுத்துவதற்குமான ‘நீர் வழங்கல் மற்றும் சுகாதார நலத்தை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்’ ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்காக உலக வங்கியின் முதலீட்டுக் கருத்திட்ட நிதியிடல் பத்திரத்தின் கீழ் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் 165 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன. கருத்திட்டத்தின் விடயப்பரப்பை மேலும் விரிவாக்கம் செய்வதற்காக உலக வங்கியின் மேலதிக நிதிக்கூறு (இரண்டாம் கட்டம்) அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன்கீழ் மாத்தறை, குருநாகல், மாத்தளை மற்றும் கம்பஹா போன்ற மாவட்டங்களிலும் குழாய்நீர் வழியை நீடிப்பதற்கான கருத்திட்டத்தை அடையாளங்கண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

2025.06.30 ஆகும் போது கருத்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருப்பினும் நிர்மாணப் பணிகளின் செலவு அதிகரித்தமை மற்றும் பெறுமதிசேர்வரி (VAT) திருத்தம் செய்யப்பட்டமை போன்ற விடயங்களால் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு மதிப்பீடு 1,180 மில்லியன் ரூபாவை அதிகரிக்க வேண்டியுள்ளது. அதற்கமைய, கருத்திட்டத்தின் மொத்தச் செலவு மதிப்பீட்டைத் திருத்தம் செய்வதற்கும் தேவையான மேலதிக நிதியை 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்வதற்கும் நகர அபிவிருத்தி, கட்டுமானங்கள் மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் / முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான காலை உணவு வழங்கும் வேலைத் திட்டம்.

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தால் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப வழிகாட்டலின் கீழ் எடை குறைந்த பிள்ளைகள் அதிகமாகவுள்ள முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள்/முன்பள்ளிப்பிள்ளைகளுக்கான காலை உணவு வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு 60/- வழங்கப்படுவதுடன், 2025 ஆம் ஆண்டில் 1,55,000 பிள்ளைகள் பயனடையவுள்ளனர். சமகாலத்தில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளமையால், ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு ஒதுக்கப்படுகின்ற 60/- தொகை போதுமானதாக இன்மையால், குறித்த தொகையை100/- ஆக அதிகரிப்பதற்கும் ‘எடை குறைந்த பிள்ளைகள் அதிகமாகக் காணப்படுகின்ற முன்பள்ளிகள்’ எனும் அளவுகோலை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்படுகின்ற முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள்/முன்பள்ளிகளின் குறித்த வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 09. வன்முறைகளால் பாதிக்கப்படுகின்ற பெண்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக தற்காலிக பாதுகாப்பு இல்லங்களை நிர்வகித்தல்

பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளால் பாதிக்கப்படுகின்ற பெண்கள் மற்றும் சிறுவர்களுக்குத் தற்காலிகப் பாதுகாப்பு வழங்குவதற்காக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சால் கம்பஹா, இரத்தினபுரி, மொனராகலை, கொழும்பு, மாத்தறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் ஒரு பாதுகாப்பு இல்லமும் அநுராதபுர மாவட்டத்தில் 02 பாதுகாப்பு இல்லங்களுமாக மொத்தம் 10 இல்லங்கள் நடத்திச் செல்லப்படுவதுடன், நுவரெலியா மாவட்டத்துக்கான பாதுகாப்பு இல்லமொன்றை 2025 ஜனவரி மாதம் தொடக்கம் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருசில பாதுகாப்பு இல்லங்களில் நிர்வாகம் மற்றும் பராமரிப்புச் செலவுகளை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு நேரடியாகப் பொறுப்பேற்றுள்ளதுடன், ஒருசில இல்லங்களுக்கான செலவுகள் பெண்கள் நலன்புரிசார் அமைப்புகள் சிலவற்றால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. 2020 தொடக்கம் 2024 ஆம் ஆண்டுவரை இரண்டாம் காலாண்டு வரை 2,852 பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 60.35 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது.

ஆனாலும், குறித்த காலப்பகுதியில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுக்கு 37.69 மில்லியன் ரூபா மாத்திரமே நிதியொதுக்கீடு கிடைத்துள்ளதுடன், 22 மில்லியன் ரூபா கொண்ட செலவுறுதிச் சிட்டைகள் தொடர்ந்தும் ஈடுசெய்யப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவைக் கருத்திற்கொண்டு 2025 ஆம் ஆண்டுக்கான 25 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்வதற்கும் பின்னர் அடுத்துவரும் ஆண்டுக்குத் தேவையான நிதியொதுக்கீட்டை வரவு - செலவுத்திட்டத் திணைக்களத்தின் மூலம் ஒதுக்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 10. சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதியில் செயற்கை ஓட்டப் பாதையை சர்வதேச தர நிர்ணயங்களுக்கேற்ற வகையில் மீளமைத்தல்

சுகததாச சர்வதேச விளையாட்டுத் தொகுதியானது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முதற்தர விளையாட்டு வசதிகளை வழங்கும் விளையாட்டுத் தொகுதியாவதுடன், அனைத்து வசதிகள் மற்றும் சர்வதேச தர நிர்ணயங்களுடன் 400 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 80 மீற்றர் செயற்கை ஓட்டப் பாதையைக் கொண்டமைந்த விளையாட்டுத் தொகுதியாகும். 2018 ஆம் ஆண்டில் மேற்குறித்த செயற்கை ஓட்டப் பாதை மீள அமைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது பல குறைபாடுகள் காணப்படுவதால் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்குக் கூட பொருத்தமற்ற நிலையில் இருப்பதாக இலங்கை தடகள விளையாட்டுச் சங்கம் அறிவித்துள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்துக்கு விளையாட்டு வீரர்களை அனுப்புவதற்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் மேற்குறித்த ஓட்டப் பாதையை சர்வதேச தர நிர்ணயங்களுக்கமைய புனரமைப்பு செய்வதற்கு தேசிய ரீதியில் முன்னுரிமை வழங்க வேண்டியதொரு பணியாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதியின் செயற்கை ஓட்டப் பாதையை மீளமைத்தல், ஓட்டப் பாதையின் மையத்தில் அமைந்துள்ள காற்பந்து மைதானத்தை தயார் செய்தல், அதற்குத் தேவையான இலத்திரனியல் நேரக்கணிப்பு இயந்திரத்தைப் பொருத்துதல் மற்றும் மின்விளக்குக் கோபுரங்களை மறுசீரமைத்தல் போன்ற பணிகளை உரிய பெறுகைச் செயன்முறைகளைக் கடைப்பிடித்து மேற்கொள்வதற்கு இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

### 11. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆவது பிரிவின் கீழ் புதிய ஒழுங்குவிதிகளை வெளியிடுதல்

நாட்டின் வெளிநாட்டு செலாவணிக் கையிருப்பை பாதுகாப்பதற்காக சில மூலதன கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான நேரெதிர் பண அனுப்பல்களின் தற்காலிக ஏற்பாடுகள் மற்றும் மட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் மூலதனப் பாய்ச்சல் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியின் விதந்துரைகளுக்கமைய 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 22 ஆவது பிரிவின் கீழ் 2020-04-02 திகதியிலிருந்து அவ்வப்போது ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏற்பட்டுள்ள விருத்தி மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகளைக் கருத்திலெடுத்து சில கைவிடுதல்கள் / வரையறுத்தல்களை படிப்படியாக நீக்கும் / தளர்த்தும் நோக்கத்துடன் 2023 ஜூன் மாதத்திலிருந்து... (05ஆம் பார்க்க...)



## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மார்கழி மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** வீணான மனக்கவலைகளை விட்டு அமைதியுடன் இருங்கள். பயணங்களைக் குறைத்துக்கொள்வது நல்லது.

**ரிஷபம்** யாரையும் நம்பி புதிய தொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம். வாகனப் பயணங்களில் கவனம் வேண்டும்.

**மிதுனம்** உங்கள் தேவைக்காக பண கிடைக்கும். மனத் துணிவுடன் சிங்கத்தைப் போல் நிமிர்ந்து நிற்பீர்கள்.

**கடகம்** யாருக்கும் வாக்களிக்காதீர்கள். கடன் கொடுப்பது, பெறுவது சில பிரச்சினைகளை ஏற்படுத்தும். எச்சரிக்கை வேண்டும்.

**சிம்மம்** மனதில் ஒருவித பய உணர்வு, படபடப்பு தோன்றும். வீண் டென்ஷன் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

**கன்னி** தேவையற்ற பயணங்கள், அதனால் செலவுகள் இவை இன்றைய நாளில் தவிர்க்க முடியாதவை.

**துலாம்** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். நினைத்தகாரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்** நீங்கள் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள், உயர்வுகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**தனுசு** நீங்கள் உங்கள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கா-விட்டால் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டிவரும்.

**மகரம்** மௌனம் காப்பது, மனதை ஒரு நிலைப்படுத்துவது, ஆன்மீக சிந்தனை இவையெல்லாமே இன்று உங்களுக்கு மருந்தான நாள்.

**கும்பம்** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள். மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**மீனம்** சுயதொழில் மூலம் நன்மைகள் இலாபங்கள் உண்டு. உடல், மன நோய்களால் சற்றுத் தொந்தரவுகள் உண்டு.

**திதி** : பஞ்சமி மு.ப.10.49 வரை பின் சஷ்டி

**நட்சத்திரம்** : மகம் பி.இ.3.47 வரை பின் பூரம்

**பிறை** : தேய்பிறை

**யோகம்** : மரண யோகம் பி.இ.3.47 வரை பின் அமிர்த யோகம்

**வார சூலை** : மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.

**நல்ல நேரம்** : காலை 6.17 – 9.17 மணி வரை. காலை 10.17 – 10.47 மணி வரை. பகல் 1.17 – 3.17 மணி வரை. மாலை 5.17 – 6.17 மணி வரை

**ராகு காலம்** : 10.47 – 12.17 மணி வரை

**எமகண்டம்** : 3.17 – 4.17 மணி வரை

**குளிகை** : 7.47 – 9.17 மணி வரை

**சந்திராஷ்டமம்** : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 3.47 மணி வரை**
பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பின்னிரவு 3.47 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை,ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம்,உத்திரம்,அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம்,உத்திராடம், திருவோணம்,சதயம்,உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**

(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து மின்சார சபைக்கு 150 மில். டொலர் கடன்

## ஒப்பந்தமும் கைச்சாத்து



இலங்கை மின்சார சபைக்கு கடந்த நவம்பரில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட 150 மில்லியன் டொலர் கடனுக்கான ஒப்பந்தம் நேற்று (19) கைச்சாத்திடப்பட்டது.

இந்தக் கடன் தொகையை இலங்கை மின்சார சபைக்கு பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தை இலங்கை அரசாங்கத்தால் கடந்த ஒக்டோபர் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் வரவிருக்கும் முதலீட்டு முன்மொழிவுகளின் தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சமூக தகுதிகள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடுமையான விடாமுயற்சியின் பின்னர் 2024 நவம்பரில் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் பொதிக்கு ஒப்புதல் அளித்தது.

இந்த நிதிகள் மூலம் இலங்கை மின்சார சபையின் நீண்டகாலப் பரிமாற்றத் திட்டத்தில் பல அத்தியாவசிய திட்டங்கள் 2025-2027 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும். இது கட்டத்தின் ஒட்டுமொத்த நம்பகத்தன்மையையும் ஸ்திரத்தன்மையையும் மேம்படுத்தும். இக்கடனின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட பரிமாற்ற சொத்துகள் திட்டமிடப்பட்ட பாரியளவிலான மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திகளை தேசிய மின்கட்டமைப்புடன் ஒருங்கிணைக்க இயலுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நிதியுதவித் திட்டத்தில்,

6 புதிய மின் கட்டமைப்புத் துணை மின் நிலையங்கள் கட்டுதல்.

87 கி.மீ.தூரத்துக்கு 132 கிலோவோல்ட்மின் வழித்தடங்கள் அமைத்தல்.

45 கி.மீ.நீளத்துக்கு 220 கிலோவோல்ட்மின் வழித்தடங்களை அமைத்தல்.

தற்போதுள்ள 2 மின் கட்டமைப்புத் துணை மின் நிலையங்களின் விரிவாக்கம்

இலங்கை மின்சார சபையும் அதன் விநியோக துணை நிறுவனமுமான லங்கா மின்சார கம்பனியும் (லெகோ), 3400 கி.மீ. உயர் மின்னழுத்த மின் நிலையங்கள் மற்றும் 90 கிரிட் துணை மின் நிலையங்களை உள்ளடக்கிய இலங்கை மின்சார சபையின் பரிமாற்ற வலையமைப்பின் ஊடாக 7.5 மில்லியனுக்கும் அதிகமான மின்சார நுகர்வோருக்கு சேவைகளை வழங்குகின்றன.

# தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம் செயலிழப்பு

## சமூக ஊடகங்களில் பரவிய போலிச் செய்தி

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம் தொடர்ந்து செயற்படுகிறது என்பதையும் அத்தளத்தில் உள்ள E-Submission பிரிவு ஒரு தற்காலிக பிரிவு என்பதால் அது செயலிழந்துள்ளது என்பதையும் இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு உறுதிப்படுத்தியது.

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம் செயலிழந்துள்ளதாக சமூகவலைத்தளங்களில் பதிவுகள் சில பகிரப்படுவதை ஆராய்ந்த FactSeeker அது போலியானதென உறுதிப்படுத்தியது.

அவ்வாறு பகிரப்பட்ட பதிவுகளில் "NPP அரசாங்கம் பொறுப்பேற்றதிலிருந்து தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் E-Submission பிரிவு செயலிழந்துள்ளது. இதனால் வெளிப்படைத்தன்மையும் தகவலறியும் உரிமையும் பாதிக்கப்படுகின்றன" - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் பதிவுகள் பலராலும் பகிரப்படுவதால் FactSeeker இது குறித்து ஆராய்ந்தது.

சமூகவலைத்தளங்களில் குறிப்பிட்டது போல் இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம் செயலிழந்துள்ளதா என ஆராய்ந்ததில், தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் E-Submission பிரிவு மாத்திரம் செயலிழந்துள்ளதென்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

இது குறித்து தகவலறியும் உரிமை ஆணைக்குழுவிடம் FactSeeker வினவியபோது, தகவலறியும் உரிமை ஆணைக்குழுவின் இணையதளம் தொடர்ந்து செயற்படுவதாகவும் குறித்த E-Submission பிரிவு ஒரு தற்காலிக பிரிவென்றும் தெரிவித்தனர். மேலும், இப்பிரிவு மாறுபட்ட துறைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் அறிவிப்புகளை இணைய வழியில் ஒருங்கிணைக்க பயன்படுத்தபட்டதாகவும் தெரிவித்தனர்.

இப்பிரிவானது புதிய அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பிலிருந்தே இருந்ததாகவும் பயிற்சிப்பட்டறைகளுக்குத் தேவையான தகவல்களை சேகரிக்க பயன்படுத்தப்பட்டதாகவும் மேலும் தெரிவித்தனர்.

ஆகவே, இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம் தொடர்ந்து செயற்படுகிறதென்பதையும் அத்தளத்தில் உள்ள E-Submission பிரிவு ஒரு தற்காலிக பிரிவு என்பதால் அது செயலிழந்துள்ளதென்பதையும் FactSeeker உறுதிப்படுத்துகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (19.12.2024)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 177.0893 | 186.4507 |
| கனேடியன் டொலர் | 197.6748 | 206.4154 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.5594 | 41.1135 |
| யூரோ | 296.5951 | 309.2495 |
| ஜப்பான் யென் | 1.8450 | 1.9209 |
| சிங்கப்பூர் டொலர் | 209.3667 | 219.2593 |
| ஸ்ரேலிங் பவுன் | 360.2790 | 374.3168 |
| சுவிஸ் பிராங்க் | 316.5042 | 331.6851 |
| ஐ.அ. டொலர் | 287.4564 | 296.0725 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 772.2744 |
| குவைட் | குவைட் தினார் | 945.5999 |
| ஓமான் | ஓமான் றியால் | 756.5782 |
| கட்டார் | கட்டார் றியால் | 79.9020 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.5203 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.3037 |

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ரிப்பர் கைப்பற்றல்

*(பு.கஜிந்தன்)*

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற ரிப்பர் லொறியொன்று துரத்திச் செல்லப்பட்டு கைப்பற்றப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லிபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற ரிப்பர் வாகனத்தை பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் நிறுத்துமாறு சைகை காட்டியுள்ளனர். அதனை மதிக்காது ரிப்பர் வாகனம் நிறுத்தாது வேகமாகச் சென்றுள்ளது.

இந்நிலையில், சுமார் நாற்பது கிலோமீற்றர் வரை குறித்த ரிப்பரை துரத்திச் சென்றுள்ள நிலையில், மேலும் தப்பிக்க முடியாத நிலையில், ரிப்பர் சாரதி ரிப்பரை நிறுத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளார்.

குறித்த ரிப்பரை பருத்தித்துறை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை. இதேவேளை, சட்டவிரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நான்கு வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை தொடர்பான தீவிர விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாழ்க்கைப் பாடம்

ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

## ஒரு கசப்பான உண்மை!

உங்களது மரணத்துக்குப் பிறகு உலகம் உங்களை எப்படிப் பார்க்கும், உங்கள் விஷயத்தில் உலகத்தார் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை நீங்கள் அறிய ஆசைப்பட்டால் மற்றொருவர் மரணமான பின் அவர் தொடர்பில் உலகத்தார் எப்படி நடந்துகொள்கின்றார்கள் என்பதைப் பாருங்கள்.

மரணித்தவரை அவருக்கு மிகவும் நெருக்கமானவர்கள் கூட காலப் போக்கில் எப்படி மறந்துவிடுகின்றார்கள். அவர்களின் உலக சோலிகள் அவர்களை எப்படி அவரது நினைவை மறக்கடிக்கச் செய்கின்றன என்பதை நீங்கள் கண்கூடாகக் காண்பீர்கள்.

இதே நிலைதான் உங்ளுக்கும் ஏற்படும். நீங்கள் உயிருக்குயிராக நேசித்தோரும் அப்படி உங்களை நேசித்தோரும் கூட உங்களை சிறிது காலத்தில் மறந்துவிடுவார்கள். உங்களை நினைவுகூரவோ உங்களை நினைத்துக் கவலைப்படவோ அவர்களுக்கு நேரமிருக்காது.

இந்த உண்மையை உணர்ந்து உங்களது முழு வாழ்வையும் அல்லாஹ்வுக்காக அமைத்துக் கொள்வதே புத்திசாலித்தனமானது; பொருத்தமானது.

ஏனென்றால், அவன் உங்களை மறக்கப் போவதில்லை; கைவிடப் போவதுமில்லை; அவனுடனான உறவைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள்; அவன் நிலையானவன்; நித்திய ஜீவன்.

அவனது படைப்புகள் தான் நிலைக்காதவை; ஒரு நாள் அழியக்கூடியவை.அவற்றுடனான உறவும் அப்படித்தான்;நிலையானதல்ல.

நிலைத்திருப்பது அல்லாஹ்வின் தன்மை;அழிவது படைப்புகளாகிய நமது தன்மை.

"(பூமியில்) உள்ள அனைவரும் அழிந்து போகக்கூடியவர்களே.

வல்லமையும் கண்ணியமும் உடைய உம் இறைவனின் முகமே நிலைத்திருக்கும்."(அர் ரஹ்மான்:26)

"அல்லாஹ் தான் மிக மேலானவன் (என்றும்) நிலைத்திருப்பவன்."(தாஹா:73)

மனிதன் அழியக்கூடியவனாக இருந்தாலும் அவன் தொடர்ந்து வாழ விரும்புகின்றான்; தனக்கு நீண்ட ஆயுள் வேண்டுமென ஆசிக்கின்றான்; நிலையான அன்புக்காக ஏங்குகின்றான். இதற்கான ஒரு வழி இருக்கிறது.அவன் என்றும் நிலைத்திருக்கும் அல்லாஹ்வை ஏற்று அவனுடன் தொடர்புபட்டு அவனது கட்டளைகள் பிரகாரம் வாழ வேண்டும். அப்போது அவன் நிலையான வாழ்வைப் பெறலாம். நாளை மறுமையில் நிலையான சுவன வாழ்வைப் பெறலாம்;சதாவும் அங்கே இன்புற்று வாழலாம்;நிலையாக இருக்கலாம்.மேலும் இறைவனுடைய தூய்மையான அன்பையும் பெறலாம். அவனது அன்பும் அருளும் அறுபடாமல் என்றும் எப்போதும் நிலைத்திருக்கும்.

எனவே, இறைவனை நம்பி ஏற்று அவனுடன் உறவு பாராட்டுங்கள். அழியக் கூடிய படைப்புகளுடனான உறவை அளவுடன் கூடியதாக வைத்துக் கொள்ளுங்கள்.

**அமைச்சரவை....04ஆம் பக்கத் தொடர்ச்சி**

இதுவரை 10 ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டுள்ளதுடன், தற்போது அமுலிலுள்ள ஒழுங்குவிதிகளின் செல்லுபடியாகும் காலம் 2024-12-19 திகதியன்று முடிவடையவுள்ளது.

தற்போது அமுலிலுள்ள ஒழுங்குவிதிகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள சில கைவிடுதல்கள் மற்றும் வரையறுத்தல்களை மேலும் திருத்தம் செய்து 2025 ஜூன் மாதம் வரை அமுலாகும் வகையில் புதிய ஒழுங்குவிதிகளை வெளியிடுதல் பொருத்தமானதென இலங்கை மத்திய வங்கியால் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய 2024-12-20 திகதியிலிருந்து அமுலாகும் வகையில் ஆறு (06) மாத காலத்துக்காக 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 22 ஆவது பிரிவின் கீழான ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**12. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல்.**

கிளிங்கர், சீமெந்து கையிருப்புகள் மற்றும் சீமெந்து சில்லறை வர்த்தகப் பொதிகளாகவுள்ள பைகளை இறக்குமதி செய்யும் போது ஒரு கிலோ கிராமுக்கு ஒரு ரூபா வீதம் செஸ் தீர்வை வரியைக் குறைப்பதற்கும் கட்டுமானப் பணிகளுக்காக சுற்றாடல் விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் விதந்துரையின் கீழ் ஒரு மில்லியன் மெற்றிக் தொன் வரை கருங்கல் தொகுதியை ஏற்றுமதி செய்தல் மற்றும் ஒரு கியூபிக் மீற்றருக்கு 1,000/- தொகையான செஸ் தீர்வை வரியை விதித்து அறவிடுவதற்கும் குறித்த காலத்தில் நிதி விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் உடன்பாட்டுடன் குறித்த காலத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் கீழான ஒழுங்குவிதி 2400/25 இலக்க 2024-09-05 திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்குறிப்பிட்ட ஒழுங்குவிதியை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**13. நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்தல்**

2025 ஆண்டில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பரஸ்பர மதிப்பீட்டின் போது, சிறந்த இடத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்ட ஏற்பாடுகளை திருத்தம் செய்ய வேண்டிய தேவை பணத் தூய்மையாக்கலை தடுப்பதற்கான கொள்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் அரசுகளுக்கிடையிலான அமைப்பான நிதிச் செயலாற்றுகை செயலணியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்காக இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் உத்தேச திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, மேற்குறித்த உத்தேச திருத்தங்களை உள்ளடக்கி நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**14. உப்புப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக உப்பு இறக்குமதி செய்தல்**

இலங்கையின் உப்பு உற்பத்தி நாட்டின் வீட்டுத் தேவைகளுக்கும் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கும் நிலவும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக போதுமானதாக அமைவதுடன், உப்பு விளைச்சல் குறிப்பாக, காலநிலையில் தங்கியுள்ளது. நாட்டில் நிலவிய மோசமான காலநிலை காரணமாக 2025 ஆண்டின் முதலாம் காலாண்டில் உள்நாட்டு சந்தையில் வீட்டுத் தேவைகளுக்கும் மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கான உப்பு விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்படலாமென அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்குத் தீர்வாக தயார் செய்து சந்தைக்கு விநியோகிப்பதற்கான தீர்வை வரி வீதத்துக்கமைய பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெட்ரிக் தொன் உச்ச அளவுக்கு உட்பட்ட உப்பை 2025-01-31 திகதி அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக (பலநோக்கு) கூட்டுத்தாபனத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு வழங்குவதற்கு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சரும் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

**15. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தை தொடர்ச்சியாக அமுல்படுத்துதல்**

தனிக்கூட்டு வரியாக அமுல்படுத்தப்படும் விசேட வியாபார பண்ட அறவீட்டின் கீழ் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உள்ளிட்ட 63 பண்டங்களை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டுமென 2024-03-25 திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயினும், மேற்குறித்த சட்டத்தை இரத்துச் செய்வதால் விசேட வியாபார பண்ட அறவீட்டு வரியுடன் தொடர்புடைய பண்டங்களை இறக்குமதி செய்யும்போது, பெறுமதி சேர் வரி அடங்கலாக ஏனைய வரிகளும் சேர்வதால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் சந்தை விலை தொடர்பில் ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் உள்நாட்டு விவசாயிகளுக்கு வசதிகளை வழங்கும் அரச கொள்கைகளில் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களையும் கருத்திற்கொண்டு 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தைத் தொடர்ந்தும் அமுல்படுத்துதல் பொருத்தமானதெனத் தெரியவந்துள்ளது.

ஆகவே, மேற்குறித்த வரியை மாற்றம் செய்வதற்காக 2024-03-25 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தை அமுல்படுத்தாதிருப்பதற்கும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபார பண்ட அறவீட்டுக்குக் கீழான பண்டங்களுக்கு விசேட வியாபார பண்ட அறவீட்டு வரி வீதத்தை 2025-01-01ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

# கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்களை பாராளுமன்ற ஹன்சாட் திணைக்களத்திடம் ஒப்படைத்தார் சஜித் பிரேமதாச

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணப் பத்திரங்களை பாராளுமன்ற ஹன்சாட் திணைக்களத்திடம் நேற்று (19) ஒப்படைத்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கல்வித் தகைமைகள் தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது சகல கல்வித் தகைமைகளை நேற்று முன்தினம் (18) பாராளுமன்றத்தில் முன்வைத்தார். இதன் பிரகாரம், நேற்று (19) முற்பகல் 11.40 மணியளவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணப் பத்திரங்களை பாராளுமன்ற ஹன்சாட் திணைக்களத்திடம் ஒப்படைத்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் (18) தனது கல்வித்தகைமையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நிரூபித்திருந்தார். அத்துடன் பிறப்புச்சான்றிதழையும் யாரும் கேட்பார்கள் என சந்தேகம் கொண்டு அதனையும் கொண்டு வந்ததாக தெரிவித்திருந்தார்.

இவ்வாறு தனது கல்விச்சான்றிதழை நிரூபித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவற்றை நேற்றுமுன்தினம் (18) பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகக் கூறிய போதிலும், அவர் இதுவரையில் அதனை பாராளுமன்றத்தின் ஹன்சார்ட் திணைக்களத்தில் சமர்ப்பிக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், அவர் இதனைத் தெரிவித்தார். அத்துடன் சான்றிதழ்களை ஆய்வு செய்து அறிக்கை வெளியிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் தனது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஏனைய ஆவணப் பத்திரங்களை பாராளுமன்ற ஹன்சாட் திணைக்களத்திடம் நேற்று (19) ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் கான்ஸ்டபிள் மீது உடைந்த போத்தலால் தாக்குதல்

ஹொரணையில் உள்ள விடுதி ஒன்றில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உடைக்கப்பட்ட மதுபான போத்தலால் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் கான்ஸ்டபிளின் உடலில் பல்வேறு இடங்களில் காயங்கள் ஏற்பட்ட நிலையில், ஹொரணை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மொரகஹஹேன பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் காயமடைந்த கான்ஸ்டபிள், நேற்று முன்தினம் (18) இரவு பணி முடிந்து விடுதிக்கு வந்து மற்றுமொரு நபருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர் விடுதியை விட்டு வெளியேறிய கான்ஸ்டபிளை உடைத்த மதுபான போத்தலால் சந்தேக நபர் தாக்கியுள்ளார்.சந்தேகநபர் அன்றிரவு ஹொரணை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அதானி குழுமத்தின் ஏனைய நாடுகளுடனான பரிவர்த்தனைகள் இலங்கையின் கவலை அல்ல

## ஜனாதிபதி அநுர சுட்டிக்காட்டு

இலங்கையில் அதானி குழுமத்தின் முதலீடுகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடமிருந்து பலமான ஆதரவு கிட்டியுள்ளது. இந்தியாவின் Economic Times உடனான பிரத்தியேக நேர்காணலின்போது தனது அரசாங்கம், குழுமத்தின் சர்வதேச பரிவர்த்தனைகளைக் காட்டிலும் உள்ளூர் செயற்றிறனுக்கே முக்கியத்துவமளிப்பதாக அவர் வலியுறுத்தினார்.

இலங்கைக்கான இந்திய திட்டங்களின் நன்மைகளை மதிப்பிடும் அதேவேளை, அவர்களின் முதலீடுகளை எளிதாக்குவதற்கான தனது நிர்வாகத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டிய ஜனாதிபதி, "எங்களுக்கு அவர்கள் எங்களுடன் எவ்வாறு வேலை செய்கிறார்கள் என்பதே முக்கியமானது" - என்று தெரிவித்தார். அவரது அரசாங்கத்தின் ஆதரவு குறிப்பாக, பிராந்திய கடல்சார் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதில் CWIT திட்டத்தின் மூலோபாய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

கொழும்பு மேற்கு சர்வதேச முனைய (CWIT) திட்டத்துடன் அதானி துறைமுகங்கள் (Adani Ports) முன்னேறிவரும் நிலையில், முன்பு திட்டமிடப்பட்ட US DFC நிதியைக் கைவிட்டு தற்போது சுயநிதியைப் பயன்படுத்த முடிவுசெய்துள்ளது.

CWIT திட்டத்துக்கு $700 மில்லியனை சுயநிதியாக வழங்க அதானி துறைமுகங்கள் எடுத்த முடிவு, குழுவின் நிதிப் பலம் மற்றும் இலங்கைச் சந்தை மீதான அவர்களின் அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது.

முன்னர் அறிவிக்கப்பட்ட $553 மில்லியன் அமெரிக்க DFC கடன் ஏற்பாட்டிலிருந்து விலகுவதற்கான முடிவு, நிறுவனத்தின் நிதி சுதந்திரத்தை எடுத்துக் காட்டுகிறது. அதானியின் நிதித் திறன்கள் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில், "அவர்கள் அதைக் கைவிட்டுவிட்டார்கள் என்பதை நான் அறிந்தேன். ஆனால் அதற்கான சொந்த வருவாய் அல்லது வருமான மூலங்கள் அவர்களிடம் இருப்பதாகத் தெரிகிறது.

2025ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள CWIT திட்டம், இலங்கையின் கடல்சார் உட்கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

எரிசக்தித் துறையில் சில திட்டங்கள் குறித்து சுற்றுச்சூழல் கவலைகள் எழுப்பப்பட்டமையை ஒப்புக்கொண்ட ஜனாதிபதி, சமநிலையான அணுகுமுறையைப் பேணினார். "நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் சாதக பாதகங்களை நாங்கள் கருத்திற்கொள்வதுடன், மக்களின் ஒருமித்த கருத்தையும் கவனத்தில் கொள்வோம்" -என்றார்.

மேலும், இலங்கைக்கு முதலீட்டைப் போலவே சுற்றுச்சூழல் அக்கறைகளும் முக்கியம். ஜனாதிபதியின் அணுகுமுறை, குறிப்பாக, எரிசக்தித் துறையில் அதானியின் சாத்தியமான முதலீடுகள் தொடர்பாக அபிவிருத்தித் தேவைகள் மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பு ஆகியவற்றுக்கிடையிலான கவனமான சமநிலையைப் பிரதிபலிக்கிறது. எவ்வாறாயினும், இலங்கையின் அபிவிருத்தி முன்முயற்சிகளுடன் ஒத்துப்போகும் திட்டங்களில் அதானி குழுமத்துடன் இணைந்து பணியாற்றுவதில் நம்பிக்கை தெரிவித்தார்.

# யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம்; அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.கோரிக்கை



யாழ்ப்பாணம், தையிட்டியிலுள்ள திஸ்ஸ விகாரை விவகாரம் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (18) நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

''இனவாதம் தான் இந்த நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்துகின்றதென்று ஜனாதிபதி தனது அக்கிராசன உரையில் தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும், நாம் அனைவரும் இலங்கையர்கள் என்று கூறுவதால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்துவிடப்போவதில்லை. கடந்த 75 வருடங்களாக நாங்கள் பாரபட்சத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளோம். தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் யாராக இருந்தாலும் எமது அடையாளங்களையும் இன ரீதியில் அடையாளப்படுத்த வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்திடம் ஒரு விடயத்தைக் கேட்கின்றோம். நாட்டில் தையிட்டி என்ற இடத்தில் ஒரு விகாரை உள்ளது. அதனை திஸ்ஸ விகாரை என்று குறிப்பிடுவர். அது இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டது. ஏற்கனவே இருந்த விகாரைக்கென காணி இருந்தது. அதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. அந்தக் காணியில் விகாரையை அமைப்பதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆனால், அதி பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தனியாருக்குரிய காணியை எடுத்து அவர்கள் அந்த விகாரையை நிர்மாணித்துள்ளனர். அதற்கான அடிக்கல் வைக்கப்படும்போது எமக்கு அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இது சட்டவிரோத நிர்மாணம் என்றும் இதனை நிறுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானத்தையும் மீறி அந்த நிர்மாணத்தை முன்னெடுத்துள்ளனர். இது தொடர்பில் கடந்த பாராளுமன்றத்திலும் கூறியிருந்தேன். பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கும் அறிவித்திருந்தேன். யாழ். அரச அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்டிருந்தன. அந்த அறிக்கையை இந்தச் சபையில் சமர்ப்பிக்கின்றேன். அந்த அறிக்கையில் இந்த விகாரை எந்த அனுமதியும் பெற்றுக்கொள்ளாது தனியார் காணியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தவறுகள் திருத்தப்பட வேண்டும். எவ்வாறு தனியார் காணிகளை அபகரித்து நிர்மாணிக்க முடியும்? எந்தவொரு தனிநபருக்கும் தீங்கு விளைவிக்கக் கூடாது என்பதே புத்தரின் கொள்கையாகும். ஆனால், அது பின்பற்றப்படவில்லை. அதேபோன்று வடக்கிலும் கிழக்கிலும் பல விகாரைகள் உள்ளன. எமது தமிழர்கள் பௌத்தர்களுக்கு எதிரானவர்கள் அல்லர். பௌத்தம் என்ற போர்வையில் அவர்களின் காணிகள் அபகரிக்கப்படும்போது எப்படி அனைவரும் இலங்கையர் என்று கூற முடியும்? இந்த விடயத்தில் அரசாங்கம் கவனஞ்செலுத்த வேண்டும்''- என்றார்.



கொழும்பு -11, செட்டியார் தெரு நாட்டுக்கோட்டை நகரத்தாரின் புதிய கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் அகில இலங்கை சபரி தீர்த்த யாத்திரைக் குழு வழங்கும் மகரஜோதி மண்டல விழா பூஜை நிகழ்வுகளும் மஞ்ச மாதா பூஜையும் மிகச் சிறப்பாக இடம்பெற்றன. இதன்போது ஐயனுக்கு விசேட தீபாராதனை, மஞ்ச மாதாவுக்கு விசேட தீபாராதனை என்பன காட்டப்பட்டு பக்தர்களின் மஞ்சள், மஞ்ச மாதா தேவிக்கு தூவப்பட்டு, விசேட பஜனை இடம்பெற்று பக்த அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. தொடர்ந்து 26ஆம் திகதி மகா மண்டல பூஜை காலை கணபதி வழிபாடுகளோடு இடம்பெறவுள்ளது. 28ஆம் திகதி கருப்பண்ணாசாமி பூஜை, 29ஆம் திகதி பொண்ணு பதினெட்டாம் படி பூஜை என்பன இடம்பெறவுள்ளன.

# தொழிலதிபர் வாசனா தயானந்த போம்பலவுக்கு கௌரவம்!



களுத்துறை மாவட்டத்தில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை மேற்கொண்டுவரும் ஹொரணை, வாசனா நிறுவனத்தின் அதிபர் தயானந்த போம்பலவுடனான ஒரு சிறப்பு சந்திப்பு வாசனா நிறுவனத்தில் நடைபெற்றது.

இதன்போது புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் நிறுவுனர் திருமதி தனலட்சுமி மாதவன் , சர்வதேச ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தன் மற்றும் இந்திய ஊடகவியலாளர் காஞ்சிபுரம் தியாகராஜன் ஆகியோர் தயானந்த போம்பவல, திருமதி தயானந்த ஆகியோரைச் சந்தித்து அவர்களின் மக்கள் சேவைகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாத்தளை விவசாயிகளுக்கு 642 தொன் உரம்

மாத்தளை மாவட்ட விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் பொருட்டு உலக உணவுத் திட்டத்தின் கீழ் MOP உரம் 365 தொன் தற்போது கிடைத்துள்ளதாக மாவட்ட விவசாய சேவை ஆணையாளர் பி.என்.சி.எச். குமாரிஹாமி தெரிவித்துள்ளதாக மாத்தளை மாவட்ட ஊடகப் பிரிவு தெரிவிக்கிறது.

தற்போது 150 தொன் உரம் 5 விவசாய சேவை மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய மையங்களுக்கு உரம் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2024/25 காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்தில் நெல் சாகுபடி இலக்கு ஏறக்குறைய 21.935 ஹெக்டெயர் ஆகுமெனவும் மாவட்டத்துக்கு சுமார் 642 தொன் MOP உரம் தேவைப்படுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உரத் தொகுதி கிடைத்தவுடன் மாவட்ட விவசாயிகளிடையே உடனடியாகப் பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக விவசாய சேவை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.



கொழும்பு ஆண்கள் அஹதிய்யா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா தெஹிவளை எஸ்.டி.எஸ். ஜயசிங்க மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் என். பி. எம். பாயிஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது வெளியிடப்பட்ட 'இல்முத் தீன்' மலரின் முதல் பிரதியை கௌரவ அதிதி புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொண்டதுடன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருது, சான்றிதழ்களையும் வழங்கினார்.

# 50ஆவது வருட பூர்த்தி விழாவைக் கொண்டாடும் சீனன்கோட்டை ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகம்



(பேருவளை பீ.எம் முக்தார்)

பேருவளை, சீனன்கோட்டை ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகம் தனது 50ஆவது வருட பூர்த்தி விழாவை நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் அண்மையில் கொண்டாடியது.

பேருவளை, சிமிச் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்ட எயார் வைஸ் மாஷல் (Air vice marshal) ஆர்.எஸ்.விக்ரமரத்னவுக்கு அன்ஸார் ஜுனைத், செயலாளர் எம்.ஹிஸான் ஹாஷிம் ஆகியோர் 50 வருட பூர்த்தியையொட்டி வெளியிடப்பட்ட விஷேட மலரை கையளித்தனர்.

தலைசிறந்த உதைபந்தாட்ட வீரர்களை உருவாக்கிய கழகமாக சீனன்கோட்டை ஸன்ரைஸ் விளையாட்டுக் கழகம் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றியடைந்தோர் கௌரவிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற தேசிய இலக்கிய விருது வழங்கல் விழாவின் ஆரம்பகட்டமாக அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டி மற்றும் மாவட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். ரிம்ஸான் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெயராஜன் கலந்துகொண்டு கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவித்தார்.

மேலும் விசேட அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ.அருணன், சிறப்பு அதிதிகளாக காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், நிர்வாக உத்தியோகத்தர் ரீ.கமலநாதன் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றியீட்டியோருக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி வைத்தனர். மேற்படி போட்டியில் 06 பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 80 போட்டியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# எலிக்காய்ச்சல் விழிப்புணர்வு நடைபவனி




(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட விவசாயிகளுக்கான எலிக்காய்ச்சல் (லெப்டோஸ்பைரோஸிஸ்) தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி புதன்கிழமை இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் இந்த விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்நடை பவனியில் சாய்ந்தமருது குடாக்கரை மேற்கு விவசாயிகள் சங்கத்தின் உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.





மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒளி விழா பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (19) நடைபெற்றது. குருமண்வெளி மெதடிஸ்த திருச்சபையின் சகோ.இராமையா ஜஸ்டின் பிரபாகரனின் ஆசிச்செய்தியுடன் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற கலைநிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், நத்தார் தாத்தா வருகை மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், நிர்வாக உத்தியோகத்தர் வே.தவேந்திரன், அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (குருக்கள்மடம் செய்தியாளர்)



**பொத்துவில் பிரதேச மக்களின் நலன்கருதி பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயமும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் இணைந்து நடத்திய மருத்துவ முகாம் புதன்கிழமை (18) சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் இடம்பெற்றது. இந்த மருத்துவ முகாமில் தொற்றா நோய் தொடர்பான பரிசோதனைகள் இடம்பெற்றதுடன், நோயாளிகளின் இரத்தத்திலுள்ள சீனி அளவு, குருதியமுத்தம், கண் பரிசோதனைகள், பல் பரிசோதனைகள் போன்றன மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. (ஒலுவில் செய்தியாளர்)**








**மட்டக்களப்பு மாநகர சபையின் வருடாந்த ஒளிவிழா ஆணையாளர் நா.சிவலிங்கம் தலைமையில் நகர மண்டபத்தில் புதன்கிழமை(18) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் அருட்தந்தையுமான அ.நவரெட்ணம் அடிகளார், சீயோன் தேவாலயத்தின் உதவிக்குரு க.திருக்குமரன் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது மாநகர சபையின் கணக்காளர் கே.அரசரெட்ணம், பொறியியலாளர் திருமதி சித்திராதேவி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் உள்ளிட்ட மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் அவர்களது பிள்ளைகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (மட்டக்களப்பு செய்தியாளர்)**

# பாதிக்கப்பட்ட வயல் காணிகளின் மதிப்பீட்டு நடவடிக்கை

(சீனக்குடா செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டத்தில், அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டநெற் காணிகளின் இழப்பீடு தொடர்பாக, மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்ட கமத்தொழில் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் உதவிப் பணிப்பாளர் கே.எல்.அன்சார் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில், கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவு உட்பட வன்னியனார்மடு விவசாய சம்மேளனப் பிரிவிலுள்ள, பாதிக்கப்பட்ட சிறுபோக நெற்காணிகள் நேற்று வியாழக்கிழமை (19) திருகோணமலை மாவட்ட கமத்தொழில் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபை குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டது.

இதன்போது, வன்னியனார்மடு பிரதேசத்தில் சுமார் 700 ஏக்கர் வயல் காணிகள் உள்ளன என்றும் அதில் 50 வீதமான வயல் நிலங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் ஏனையவை பகுதியளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் வன்னியனார்மடு விவசாய சம்மேளனத் தலைவர் கே.எம்.ராசிக் பரீட் தெரிவித்தார்.

கடந்த 16ஆம் திகதி முதல் மாவட்ட அடிப்படையில், ஒவ்வொரு கமநல சேவை பிரிவுகளிலும் இழப்பீடு தொடர்பாக, இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தொடர்ச்சியாக மீண்டும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் திருகோணமலை மாவட்ட கமத்தொழில் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சபையின் உதவி பணிப்பாளர் தெரிவித்தார்.

# சம்மாந்துறையில் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம்



(நாவிதன்வெளி செய்தியாளர்)

சம்மாந்துறை பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் உள சுகாதாரக் குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை (19) இடம்பெற்றது.

சிறுவர்களின் உரிமை மேம்பாடு, பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமை மீறல், உளவளசார் நடவடிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் சம்பந்தமாக துறைசார் பிரதிநிதிகளுடன் இதன்போது கலந்தாலோசிக் கப்பட்டன.

இந்நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் டாக்டர் கசூன் கடுவல, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத், மேலதிக மாவட்டப் பதிவாளர் ஏ.கே.ரினோஸா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வி.விஜயதாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஜே.குறைசா, உளவளத்துணை உத்தியோகத்தர் கே.தயாளினி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார அதிகாரி, வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





**திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளி விழா மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் புதன்கிழமை (18) இடம்பெற்றது. மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் பல்லின சமூகங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அவரவர் பண்பாட்டு நிகழ்வுகளை அரங்கேற்றிய அதேவேளை, நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர் சிறுமியருக்கு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகளினால் நத்தார் பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (சீனக்குடா செய்தியாளர்)**





**மூதூர் பிரதேச செயலகம், கலாசார அலுவல்கள் திணைக்களம், மூதூர் பிரதேச கலாசார அதிகார சபை ஆகியன இணைந்து நடத்திய பிரதேச கலை இலக்கிய விழா மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக் தலைமையில் பிரதேச செயலகத்தில் புதன்கிழமை(18) நடைபெற்றது. மாவட்ட செயலாளர் சாமிந்த ஹெட்டியாரச்சி பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள் அதிதிகளாகக் கலந்துகொண்டனர். இதன்போது பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்பட்ட பாடசாலை மற்றும் திறந்த மட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றியீட்டியவர்கள் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (தோப்பூர் செய்தியாளர்)**



**சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் நீண்ட நாள் தேவையாக இருந்த ஜனாஸா வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான நிதித் தேவைக்கான கோரிக்கை சமூக செயற்பாட்டாளரும் அரசியல்வாதியுமான பொறியியலாளர் கலாநிதி உதுமான்கண்டு நாபீரிடம் முன்வைக்கப்பட்டது. இக்கோரிக்கைக்கிணங்க, அவரின் சொந்த நிதியிலிருந்து 03 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. இதன்போது ECM நிறுவன முகாமையாளர் எம்.ஐ.அப்துல் மஜீதினால் சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் காரியாலயத்தில் அதன் தலைவர் ஏ.எஸ்.அஸ்வர் மற்றும் உறுப்பினர்களிடம் செவ்வாய்க்கிழமை(17) வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பெரியநீலாவணை மேலதிக செய்தியாளர்)**





**இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் அதிகாரப் பகிர்வைச் சூழவுள்ள எதிர்மறை கருத்துகளை எதிர்கொள்ளல் மற்றும் உள்ளடக்கத்துக்கான வலியுறுத்தல்கள் பற்றிய செயலமர்வு புதன்கிழமை (18) திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப்பிரிவு மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (கிண்ணியா செய்தியாளர்)**

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவுதொகை வழங்கும் இந்தியாவின் முடிவு வரவேற்கத்தக்கது

## கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கனகசிங்கம்

(புளியந்தீவு செய்தியாளர்)

''வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள். இது யாவரும் அறிந்த உண்மை. பொருளாதார பற்றாக்குறை ஏற்படும்போது பல்வேறு இடர்பாடுகள் தோன்றுவது இயற்கை. எமது மாணவர்கள் பொருளாதார இடர்பாடுகளைத் தாங்கிக்கொண்டு கல்வியைத் தொடர்கிறார்களே என்பதையிட்டு நாம் சந்தோஷமடைய வேண்டும். இந்திய அரசு இதனைக் கருத்திற்கொண்டு எமது மாணவர்களுக்கு தனித்தனியாக உதவுதொகையை வழங்குவதற்கு முன் வந்ததையிட்டு அந்த அரசுக்கு நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்'' - என கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ்.கனகசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இங்கே ஒரு விடயத்தை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இந்த உதவுதொகையை ஒரு சில மாணவர்களே பெறுகிறார்கள். உதவு தொகையைப் பெறக்கூடிய மாணவர்கள் இன்னும் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையை இந்திய அரசாங்கம் கூட்டினால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

பல மாணவர்கள் இன்னமும் நன்மை யடைவார்கள் என்பது எனது தனிப்பட்ட கருத்து. எனது கருத்துக்கு இந்திய அரசாங்கம் செவி சாய்க்குமானால் நான் நன்றியுடையவனாக இருப்பேன். ஒரு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் என்ற வகையில் நான் எனது கோரிக்கையை இந்திய அரசாங்கத்தின்பால் முன்வைக்கின்றேன். ஆயினும், முடிவு என் கையில் இல்லை. இந்த விடயத்தில் பல்கலைக்கழக பேராசிரியராகிய நான் இதைத்தானே சமர்ப்பிக்க முடியும்''- என்றார்.

# அரசாங்கம் தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. தெரிவிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

''அரசாங்கம் நாட்டினுடைய பொருளாதாரச் சுமையை மக்கள் மீது சுமத்தாது பொருட்களின் விலைகளைக் குறைத்து தேர்தல் காலங்களில் தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்'' - என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''தேர்தல் காலங்களில் பொருட்களின் விலைகளைக் குறைப்போம், மின்சாரக் கட்டணங்கள் மற்றும் எரிபொருட்களின் விலைகளைக் குறைப்போம் என்று பல்வேறு விடயங்களைச் சொல்லி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், தேர்தல் காலங்களில வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. மாறாக நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் அரிசி, தேங்காய் மற்றும் அத்தியவசியமான பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது அரசு திண்டாடுகின்றது.


அரசாங்கமானது அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அவற்றை மக்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

அஸ்வெசும திட்டத்தினூடாக அரச ஊழியர்களுக்கும் 06 ஆயிரம் ரூபா வட்டியில்லாத கடனாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் மரங்கள் விழுந்து சேதமடைந்த நிலையில் பல பாடசாலைகள் உள்ளன. அவற்றை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

அதேபோல், பல வீதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றன. இவ்வீதிகளை புனரமைப்பதற்கான நிதியை நிதிப்பற்றாக்குறை காரணமாக மாகாண சபையில் பெறமுடியாமல் இருப்பதால் மத்திய அரசாங்கத்தினூடாக வழங்கி பாடசாலை மற்றும் வீதிகளைப் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்'' - என்றார்.

# ஓட்டமாவடி பொதுச் சுகாதார அலுவலக பிரிவில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

(கல்குடா செய்தியாளர்)





ஓட்டமாவடி பொதுச்சுகாதார அலுவலகத்துடன் இணைந்து அல்-கிம்மா நிறுவனத்தின் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் புதன்கிழமை(18) கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பொதுச்சுகாதார அலுவலகப் பிரிவில் முன்னெடுக்கப்பட்டது.


மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நௌபரின் வேண்டுகோளுக்கமைய, அல்-கிம்மா நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.ஹாறூனின் பணிப்புரைக்கமைய நிறுவனத்தின் தொண்டர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்களுடன் இணைந்து மேற்படி டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பொதுச்சுகாதார பரிசோதகர்களான ஏ.ஆர்.ஹக்கீம், யூ.எல்.எம்.ஜின்னா ஆகியோர் கலந்து கொண்டனர். வீடு வீடாகச் சென்று டெங்குநோய் பற்றியும் அதன் விபரீதங்கள் பற்றியும் விளக்கமளித்ததுடன், மீண்டும் டெங்குநோய் பரவுவதற்கான காரணிகள் கண்டறியப்படுமாயின் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக்கின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின்போது, டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய இடங்கள், பொருட்கள் என்பன அடையாளங்காணப்பட்டு அழிக்கப்பட்டதுடன், ஆரோக்கியமான சூழலை உருவாக்கத் தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

# மாகாண சபை அதிகாரங்கள் முழுமையாக கிடைக்குமாயின் அது வரப்பிரசாதமாகும்

## அஷ்ரப் தாஹிர் எம்.பி.



(பாறுக் ஷிஹான்)

''மாகாண சபையின் முழுமையான அதிகாரங்கள் கிடைக்குமாயின் அதனை இப்பிராந்தியத்துக்கான ஒரு வரப்பிரசாதமாக நாங்கள் பார்க்கின்றோம்'' - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

மாகாண சபை முறைமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் மற்றும் மாகாண சபை அதிகாரங்கள் குறித்து நிந்தவூரில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் விசேட செய்தியாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது. அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

''ஒன்பது மாகாணங்களில் மாகாண சபைகள் உள்ளன. இந்த மாகாண சபையானது மக்களுக்கான பணிகளைச் செய்வதற்கும் மக்களுக்கான வேலைத்திட்டங்களை இலகுபடுத்துவதற்கும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக உருவாக்கப்பட்டன.

இந்த மாகாண சபை முறைமையினால் கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு மாகாண சபைகளைத் தவிர ஏனைய ஏழு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் தான் பயனடைந்தார்கள் என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

அதாவது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம், தமிழ், சிங்களவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இங்கு உரிய அதிகாரம் வழங்கப்படாமையால் தான் இம்மாகாணத்தில் எமது சமூகம் முழுமையான நன்மையைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எனவேதான், இந்த மாகாண முறைமை என்பது ஒழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு தற்போதுள்ள அரசாங்கத்தில் உள்ளவர்களால் பரவலாகப் பேசப்படுகின்ற விடயமாக உள்ளது.

அத்துடன், இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னும் மூன்று வருடங்களுக்குப் பின்னர்தான் இவ்விடயம் குறித்துப் பேசமுடியும் என்ற கருத்தும் மற்றொரு சாரரினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், மக்களுக்கான பணிகளைத் துரிதப்படுத்துகின்ற அபிவிருத்தி சார் பணிகள் மக்களுக்கு சென்றடைய வேண்டுமென்பதுடன் வெளிநாட்டு நிதிகளை பெற்றுக்கொள்வதற்கும் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த காலங்களில் பல தடைகளை நாம் சந்தித்திருக்கின்றோம். அதில் அதிகார ரீதியாகவும் அபிவிருத்திகளுக்கு நிதி வழங்குவது தொடர்பாகவும் முழுமையாக மறுக்கப்பட்டிருந்தன. காணி, பொலிஸ் அதிகாரங்கள் இவ்விரு மாகாணங்களிலும் மறுக்கப்பட்டிருந்தாலும் கூட ஏனைய ஏழு மாகாணங்களிலும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மறுக்கப்பட்டிருந்தாலும் அவர்களுடைய கைகளில் தான் அந்த அதிகாரங்கள் இருந்தன. இதனால் அம்மாகாண மக்கள் நன்மையடைந்தார்கள்.

அங்கு மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் ஒன்றாகப் பயணித்து ஒரு சமூகத்துக்கு பணிகளைச் செய்கின்ற முறைமையை நாங்கள் காண்கின்றோம். குறிப்பாக, வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் காணி, பொலிஸ் அதிகாரங்கள் சிறுபான்மை மக்களின் கைகளுக்குச் சென்றால் இந்த அதிகாரங்களையும் தங்களுக்கு ஏற்றாற்போல் பயன்படுத்தி விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக அச்சட்டங்களை அமுல்படுத்துவதற்கு மத்திய அரசு மிக நீண்ட காலமாகத் தடைகளை அல்லது அதிகாரத்தை வழங்காமல் இருந்து வருகின்றது.

எனவே, மாகாண சபைகளின் தேர்தல் நடத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படுமாக இருந்தால் மக்கள் பிரயோசனமடைவார்கள். அரசியல்வாதிகளும் மக்களுக்குப் பணிகளைச் செய்யவேண்டும் என்பதற்காகவே இந்த அதிகாரங்களைக் கோருகின்றார்கள்.

அரசியல்வாதிகள் மக்களுக்கும் அரசுக்குமிடையில் இருக்கின்ற ஓர் இடைத்தரகர்கள் போன்று அங்கு இருக்கின்ற வேலைத்திட்டங்களை மக்களுக்கு கொண்டு வந்து சேர்க்கின்ற மக்கள்பிரதிநிதிகளாக இருக்கிறார்கள்.

எனவே, தற்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகளவான அதிகாரங்களை வழங்கி இந்நாட்டின் பணிகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக தற்போதைய தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்கள், செயற்பாட்டாளர்கள் பேசுவதை நாங்கள் காண்கின்றோம். ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முதலில் நடத்துவதற்கான வாய்ப்பு இந்த அரசாங்கத்தில் இருக்கின்றது என்பதை அவர்களது செயற்பாட்டிலிருந்து தெரிந்துகொள்ள முடிகின்றது. அந்த வகையில், எதிர்காலத் தேர்தலினூடாக மாகாண சபையின் முழுமையான அதிகாரம் கிடைக்கப்பெறுமாக இருந்தால் அது இப்பிராந்தியத்துக்கான ஒரு வரப்பிரசாதமாக நாங்கள் பார்க்கின்றோம்'' என்றார்.

# ஏறாவூர் பிரதேசத்தில் சேதமடைந்த வீதிகளைப் புனரமைத்துத் தருக

## பிரதி அமைச்சர் ருவானிடம் முன்னாள் மாகாண அமைச்சர் சுபைர் கோரிக்கை

(ஒலுவில் செய்தியாளர்)

ஏறாவூர் பிரதேசத்தில் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் மிகவும் மோசமான நிலையிலுள்ள வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.சுபைர் மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவான் செனரத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதி அமைச்சரை அமைச்சில் அண்மையில் சந்தித்தபோதே மேற்குறித்த கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசம் கடந்த வெள்ள அனர்த்தத்தின் போது முற்றாகப் பாதிக்கப்பட்டதாகவும் மழை காலங்களில் ஏறாவூர் பிரதேசத்தின் பல வீதிகள் நீரில் மூழ்கிக் காணப்படுவதாகவும் இதனால் குறித்த வீதிகளினால் பயணிக்கின்ற பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் முன்னாள் மாகாண அமைச்சரால் இதன்போது சுட்டிக்காட்டியதுடன் ஏறாவூர் பிரதேச மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு மிகவும் மோசமான நிலையிலுள்ள மேற்படி வீதிகளைப் புனரமைத்தும் சில வீதிகளில் வடிகான் வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறும் கேட்டுக்கொண்டார்.



குறித்த விடயத்தைக் கருத்திற்கொண்ட பிரதி அமைச்சர் எதிர்வரும் காலங்களில் அவற்றுக்குரிய தீர்வை விரைவில் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

# நிபந்தனைக் காலத்தைப் பூர்த்திசெய்தோர் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்குள் உள்வாங்கப்படாமை அநீதி

## அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் லோகநாதன்



(அட்டப்பள்ளம் செய்தியாளர்)

கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்குள் கட்டாய நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் உள்வாங்கப்படாமை அநீதியானது என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

கல்முனையில் நேற்று (19) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கைத்திட்டத்துக்கமைவாக வருடந்தோறும் பாடரீதியான ஆசிரியர் தேவையான வலயங்களிலுள்ள பாடசாலைகளுக்கு வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தின் மூலமாக ஆசிரியர்கள் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் பதிலீட்டின் அடிப்படையில் 'இரண்டு வருடம் கட்டாய நிபந்தனைக் காலம் குறிப்பிட்டு' இடமாற்றம் செய்யப்பட்டு வந்துள்ளனர். இக்காலத்தைப் பூர்த்தி செய்தவுடன் அவ்வாசிரியர்களுக்கு அவர்களுடைய முன்னைய வலயங்களுக்கு வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்தின் மூலமாக இடமாற்றம் வழங்கப்பட்டு வந்துள்ளதை சகலரும் அறிவர்.

இதனடிப்படையில் முன்னாள் கல்விப் பணிப்பாளரினால் 'வருடாந்த ஆசிரியர் இடமாற்றங்கள் 2021 (பதிலீடு) தமிழ்மொழி மூலம்' என்று தலைப்பிட்டு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதத்தில் EP/20/01/04 இலக்க 2021.04.08ஆம் திகதிய அறிவித்தல் கடிதத்துக்கமைவாக இடமாற்றம் வழங்கப்படுகிறதென்று குறிப்பிட்டுக் காட்டப்பட்டதற்கமைவாக, கடமையேற்று 'இரண்டு வருட கட்டாய நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்த'ஆசிரியர்களுக்கு இதுகாலவரை இடமாற்றம் வழங்கப்படாமை அநீதியானது.

மேலும், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரது 'வலயங்களுக்கிடையிலான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் 2025' என்று தலைப்பிட்ட EP/20/01/04 இலக்க 2024.06.10ஆம் திகதிய அறிவித்தல் கடிதம் பந்தி (1) இல் வலய இடமாற்ற அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்ற உச்சபட்ச சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த ஆசிரியர்கள் வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாமென்று குறிப்பிடப்பட்டமைக்கமைவாக இரண்டு வருட கட்டாய நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்த சுமார் 30 பேர் வரையான ஆசிரியர்களும் விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வாசிரியர்கள் பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச பாடசாலைகளிலும் கடமைபுரிகின்றனர். கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் 'வருடாந்த ஆசிரியர் இடமாற்றம்- 2025 முன்மொழிவு என்று தலைப்பிட்டும்EP/20/01/04 இலக்க 2024.11.13ஆம் திகதியிடப்பட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்ட பெயர்ப்பட்டியலில் கட்டாய நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் உள்வாங்கப்படவில்லையென்பதை பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய அரசாங்கம் நீதியான, நேர்மையான நிர்வாக செயற்பாட்டை விரும்புகின்ற அரசாக இருப்பதால் கட்டாய நிபந்தனைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் தொடர்பில் தாங்கள் பொருத்தமான நீதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். குறித்த ஆசிரியர்களின் பிரச்சினை தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநருக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்'' - என்றார்.

# பெரிய நீலாவணை கலாசார மண்டபத்தை மக்கள் பாவனைக்கு கையளிக்க ஏற்பாடு

(சாய்ந்தமருது செய்தியாளர்)



கல்முனை மாநகர சபையினால் பெரிய நீலாவணையில் அமைக்கப்பட்டுள்ள பல்தேவை கலாசார மண்டபம் விரைவில் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது.

இதன் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம்.நௌபீஸ், அதிகாரிகள் சகிதம் புதன்கிழமை(18) அங்கு விஜயம் செய்து மண்டபத்தை திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

இதன்போது கல்முனை மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச்.ஜௌஸி, கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம்.நஹீம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.சுகுமார் உள்ளிட்டோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் நவீன வசதிகளுடன் இரு மாடிகளைக் கொண்ட கட்டிடத் தொகுதியாக அமைக்கப்பட்டுள்ள இக்கலாசார மண்டபத்தில் மாநாடுகள், கூட்டங்கள், கலை, கலாசார விழாக்கள் மற்றும் பொதுமக்களின் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கேற்றவாறு குறைந்த சேவைக் கட்டணத்தில் மண்டப அனுமதியை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் வங்கி விளையாட்டு வர்ண விருது வைபவம் - 2024





மக்கள் வங்கி விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் வங்கி விளையாட்டு வர்ண விருது வைபவம் - 2024 (People's Bank Sports Awards - 2024) அண்மையில் அத்திடிய ஈகிள்ஸ் லேக்சைட் ஹோட்டலில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

2018ஆம் ஆண்டு முதல் தற்போது வரையில் மக்கள் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய மட்டத்தில், வங்கிகளுக்கிடையில் மற்றும் சர்வதேச மட்டத்தில் வெற்றிகளை ஈட்டியுள்ள 212 வீர,வீராங்கனைகளுக்கு வர்ண விருதுகள் வழங்கப்பட்டன. அத்துடன், 2019 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பிராந்திய அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களும் மக்கள் வங்கி உட்கள விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுமாக மொத்தம் 216 வீர,வீராங்கனைகளுக்கும் வெற்றிச் சின்னங்களும் விருதுகளும் வழங்கப்பட்டன.

இவற்றுக்குப் புறம்பாக, இக்காலப்பகுதியின் போது இளைப்பாறிய 20 சிரேஷ்ட விளையாட்டு வீர,வீராங்கனைகள் 20 பேருக்கு விசேட பரிசுகளும் வழங்கப்பட்டன.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா தலைமையில் இடம்பெற்ற வர்ண விருதுகள் வைபவத்தில் மக்கள் வங்கியின் சிரேஷ்ட மற்றும் முகாமைத்துவ உயரதிகாரிகள் மற்றும் பெரும் எண்ணிக்கையான வீர,வீராங்கனைகள் கலந்து சிறப்பித்தனர்.

## இளைஞர் வலுவூட்டலுக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ள யூனியன் அஷ்யூரன்ஸ்



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், களனி பல்கலைக்கழகத்தின் நிதி திணைக்களத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. தேசத்தின் எதிர்கால தலைவர்களுக்கு வலுவூட்டுவதற்கான நிறுவனத்தின் பிந்திய அர்ப்பணிப்பின் அங்கமாக அமைந்திருப்பதுடன், வயம்ப பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் மேற்கொண்ட உடன்படிக்கைகளை தொடர்ந்து இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு களனி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் பல்கலைக்கழகங்களின் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர். யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் தொடர்பு அதிகாரி நிசன்சலா பரணயாபா, களனி பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் நிலந்தி டி சில்வா மற்றும் பல்கலைக்கழகத்தின் வணிகம் மற்றும் முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பண்டார வன்னிநாயக்க ஆகியோரும் இதன்போது பங்கேற்றிருந்தனர்.

## SLIM Brand Excellence விருது விழாவில் வருடத்தின் சிறந்த புதிய நுழைவாளராக பிரகாசித்த தீவா திரிய




20 ஆண்டுகளுக்கும் மேலாக Hemas Consumer Brands நிறுவனத்தின் முதன்மையான சலவை பராமரிப்பு வர்த்தகநாமமாக திகழும் தீவா, 23ஆவது SLIM Brand Excellence விருது நிகழ்வில் அதன் துணை வர்த்தகநாமமான தீவா திரியவுக்காக (Diva Diriya) Best New Entrant of the Year (வருடத்தின் சிறந்த புதிய நுழைவாளருக்கான) வெண்கல விருதை வென்றதன் மூலம் அதன் விசேடத்துவத்தை மீண்டும் நிரூபித்துள்ளது. இலங்கை சந்தைப்படுத்தல் தொடர்பான முதன்மையான அமைப்பாக விளங்கும் Sri Lanka Institute of Marketing (SLIM) நிறுவனத்தினால் வழங்கப்படும் இந்த மதிப்புமிக்க விருதானது, இலங்கைச் சந்தையில் தீவா திரிய கொண்டுள்ள சிறந்த தாக்கத்தை எடுத்துக் காட்டுகிறது.

2022 இல் சவாலான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்ட தீவா திரிய, தரம் மற்றும் கட்டுப்படியான விலை ஆகியவற்றுக்காக கொண்டுள்ள அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காக ஒப்பிட முடியாத நற்பெயரைப் பெற்றுள்ளது. தீவா எனும் வர்த்தக நாமத்தின் நோக்கத்தின் அடிப்படை அம்சத்தை பேணியவாறு, இவ்வர்த்தகநாமம் தூய்மைப்படுத்தலில் உயர் செயற்றிறனுடன் சந்தையில் கட்டுப்படியான விலையில் தொடர்ச்சியாக இடம்பிடித்து வருவதன் மூலம், இலங்கை நுகர்வோருக்கு நம்பிக்கைக்குரிய, நம்பகமான தெரிவாக தீவா திரிய மாறியுள்ளது.

## ஹோமாகமவில் சியபத பினான்ஸ் 53ஆவது கிளை திறப்பு





சம்பத் வங்கி பி.எல்.சியின் முழு உரிமம் பெற்ற துணை நிறுவனமான சியபத பினான்ஸ் பி.எல்.சி., இலக்கம் 134 ஸ்டேஷன் வீதி, ஹோமாகம இல் அமைந்துள்ள அதன் 53ஆவது கிளையை வைபவ ரீதியாக அண்மையில் திறந்து வைத்தது. இலங்கை முழுவதுமுள்ள வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டு நிதித் தீர்வுகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் தற்போதைய பணியில் மற்றொரு மைல்கல்லாக இந்த மாபெரும் திறப்பு விழா அமைந்தது. இந்நிகழ்வில் சியபத பினான்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, பிரதம செயற்பாட்டு அதிகாரி ரஜீவ் டி சில்வா, ஏனைய சிரேஷ்ட அதிகாரிகள், ASP ஹோமாகம, ஹசங்க ரந்திக வெதமுல்ல, பதில் OIC- ஹோமாகம, பிரியஷாந்த, வர்த்தக சங்கத் தலைவர், மாகம்மன மகா வித்தியாலய அதிபர் திருமதி கே பத்மலதா, பிரதேசத்தில் உள்ள தனியார் துறை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் பங்குகொண்டனர்.

ஹோமாகம கிளையானது குத்தகை, நிலையான வைப்புத்தொகை, சேமிப்புக் கணக்குகள், தங்க நிதியளிப்பு, வணிகக் கடன்கள், தனிநபர் கடன்கள், விரைவான வரைவு சேவைகள், காரணியாக்கம் மற்றும் Smart Pay தானியங்கு பில் செலுத்தும் வசதி போன்ற பல்வேறு சேவைகளை வழங்குகிறது. ஹோமாகம பகுதியிலுள்ள தனிநபர்கள் மற்றும் வணிகங்கள், உள்ளூர் சமூகத்தின் நிதி அபிலாஷைகளுக்கு ஆதரவளிக்கின்றன.

ஏறக்குறைய 137 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும் இலங்கையில் உள்ள பிரதேச சபைகளினுள் அதிக மக்கள்தொகையைக் கொண்ட ஹோமாகம வேகமாக வளர்ந்துவரும் நகரமாகவும் பொருளாதார ரீதியாக ஆற்றல்மிக்க பிரதேசமாகவும் திகழ்கின்றது. இப்பகுதியானது ஆடைகள், மோட்டார் வாகனங்கள், சொத்து மேம்பாடு மற்றும் வாடகை சேவைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான வணிகங்களினால் வளர்ச்சி கண்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs), அத்துடன், பெரிய நிறுவனங்கள், ஹோமாகமவின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைகின்றன.

மேலதிக தகவல்களுக்கு, சியபத பினான்ஸ் 134, ஸ்டேஷன் வீதி, ஹோமாகம என்ற முகவரியில் அல்லது 0117605535 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் அல்லது www.siyapatha.lk ஐ பார்வையிடவும்.

## ஆசியாவின் பெரும் வணிகப் பிரிவில் சிறந்த பணியிடமாக அங்கீகரிக்கப்பட்ட சன்ஷைன் ஹோல்டிங்ஸ்



சன்ஷைன் ஹோல்டிங்ஸ், இலங்கையின் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் குழுமமான, 2024 ஆம் ஆண்டில் ஆசியாவின் பெரும் வணிகப் பிரிவில் சிறந்த பணியிடமாக Great Place to Work ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது நேர்மறையான, உள்ளடக்கிய பணியிட கலாசாரத்தை உருவாக்குவதற்கான அதன் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறது. இந்த அங்கீகாரம் அதன் அனைத்து உறுப்பினர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் ஒரு முழுமையான பணியிடத்தை உருவாக்குவதற்கும் ஆதரிப்பதற்கும் சன்ஷைனின் அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது.

ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள 2.7 மில்லியனுக்கும் அதிகமான பணியாளர்களை ஒரு சிறந்த பணியிடத்தை உருவாக்குவது குறித்து ஆய்வு செய்வதன் மூலம் Great Place to Work, ஆசியாவின் சிறந்த பணியிடங்களைத் தேர்ந்தெடுக்கிறது. Great Place to Work பிராந்தியத்தின் 6.9 மில்லியன் ஊழியர்களைப் பாதிக்கும் பணியிடத் திட்டங்களையும் பகுப்பாய்வு செய்கிறது. இங்கு, சன்ஷைன் ஹோல்டிங்ஸ் ஆசியாவின் பெரும் வணிகப் பிரிவில் முதல் 70இல் 57வது இடத்தைப் பிடித்தது.

இந்த விருது குறித்து சன்ஷைன் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ஷியாம் சதாசிவம் கருத்துத் தெரிவிக்கையில், "Great Place to Work ஆசியாவின் சிறந்த பணியிடங்களில் ஒன்றாக மீண்டும் அங்கீகாரம் பெற்றிருப்பது ஒரு பெரிய கௌரவமாகும். இலங்கையில் சிறந்த பணியிடமாக நாங்கள் பெற்ற அங்கீகாரத்தைத் தொடர்ந்து, இந்த விருது மீண்டும் எங்களை ஆசியாவின் மிகவும் மரியாதைக்குரிய நிறுவனங்களில் ஒன்றாக இணைத்துள்ளதுடன், ஊழியர்களின் தொழில் வாழ்க்கையை அடைவதற்கும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளை எட்டுவதற்கும் உதவும் திறந்த, பாதுகாப்பான மற்றும் பன்முகத்தன்மை வாய்ந்த பணியிடத்தை உருவாக்குவதற்கான எங்கள் வலுவான அர்ப்பணிப்புக்குக் கிடைத்த ஒரு பெரிய சான்றாகும்" எனத் தெரிவித்தார்.

## முதலாவது Sri Lanka Technician Grand Prix 2024 போட்டியை இணைந்து நடத்திய AMW - Yamaha Motor ஜப்பான்



Associated Motorways (Private) Limited (AMW) மற்றும் ஜப்பான் Yamaha Motor ஆகியன இணைந்து, நாட்டின் முதலாவது Sri Lanka Technician Grand Prix 2024 போட்டியை அண்மையில் நடத்தியது. இந்நிகழ்வானது, Yamaha மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தொழில்நுட்ப திறன்களில் சிறந்து விளங்கும் இலங்கையின் பயணத்தின் முதல் படியாக அமைந்தது. நாடு முழுவதிலும் உள்ள Yamaha தொழில்நுட்ப வல்லுநர்கள் 'Sri Lanka's Best Yamaha Technician' எனும் பட்டத்துக்காக போட்டியிட்டதோடு, அவர்களது திறமைகள் மற்றும் நிபுணத்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு தளமாக இந்த Grand Prix போட்டி அமைந்தது.

Sri Lanka Technician Grand Prix ஆனது, Yamaha World Technician Grand Prix இற்கு இணையாக அதனுடன் ஒத்துப்போகிறது. அதில் உலகெங்கிலும் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள் 'World's Best Yamaha Technician' எனும் மதிப்புமிக்க பட்டத்துக்காக போட்டியிட்டு திறமைகளை வெளிப்படுத்துவார்கள். AMW மற்றும் Yamaha ஆகியன 2 வருடங்களுக்கு ஒரு முறை Sri Lanka Technician Grand Prix போட்டியை நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதன் மூலம் உலக அரங்கில் இலங்கையின் இருப்புக்கான பாதையை உருவாக்குவதே அவர்களது எதிர்பார்ப்பாகும்.

## NSB ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகள் 2024 இல் சிறந்து விளங்கும் CMA




ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகள் -2024 இல் இரண்டு மதிப்புமிக்க பாராட்டுகளைப் பெற்றதன் மூலம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் சிறந்த நிறுவன அறிக்கையிடல் ஆகியவற்றில் தேசிய சேமிப்பு வங்கி (NSB) மீண்டும் தனது உறுதிப்பாட்டை நிரூபித்துள்ளது. அதன் பத்து சிறந்த வருடாந்திர அறிக்கைகளில் ஒன்றாக அங்கீகாரம் பெற்றது ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை 2023.


இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தினால் (CMA) வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகள், ஒருங்கிணைந்த அறிக்கையிடலில் சர்வதேச சிறந்த நடைமுறைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை வெளிப்படுத்தும் நிறுவனங்களைக் கொண்டாடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த விருதுகள் பங்குதாரர்களுக்கு அதன் செயற்றிறன், நிலைத்தன்மை முயற்சிகள், நிர்வாகம் மற்றும் நீண்ட கால மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றின் முழுமையான பார்வையை வழங்குவதற்கான நிறுவனத்தின் திறனை மதிப்பிடுவதில் கவனம் செலுத்துகின்றன.

இந்த மதிப்புக்குரிய தளத்தில் NSB இன் அங்கீகாரம், வெளிப்படைத்தன்மை, துல்லியம் மற்றும் பங்குதாரர் தொடர்பு ஆகியவற்றில் வங்கியின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை 2023 ஆனது, அதன் செயற்பாட்டு பின்னடைவு, வளர்ச்சி உத்திகள் மற்றும் தேசிய முன்னேற்றத்துக்கான பங்களிப்புகள் ஆகியவற்றின் விரிவான விளக்கத்தை முன்வைக்கும் அதேவேளையில், சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) பரிசீலனைகளுடன் நிதி செயற்றிறனை சீரமைக்கும் வங்கியின் திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

ஸ்டேட் வங்கிகள் பிரிவில் வெற்றியாளராக அங்கீகரிக்கப்பட்டது. பொதுத்துறை வங்கித் துறையில் NSB இன் தலைமையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அங்கு அது நிதி மற்றும் நிதி அல்லாத அறிக்கையிடலுக்கான புதிய வரையறைகளை தொடர்ந்து அமைத்துள்ளது. கூடுதலாக, பத்து சிறந்த வருடாந்த அறிக்கைகளில் இடம் பெற்றிருப்பது NSBயின் அறிக்கையிடல் நடைமுறைகளில் பொதிந்துள்ள நுணுக்கமான விவரம், தெளிவு மற்றும் புதுமைக்கு மேலும் ஒரு சான்றாகும்.

# அம்பேத்கரால் களேபரமான இந்திய பாராளுமன்றம்





## “அமித் ஷா பதவி விலகவேண்டும்” எதிர்க்கட்சிகள் கோஷம்

அம்பேத்கர் குறித்து இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து காங்கிரஸ் மற்றும் இண்டியா கூட்டணிக் கட்சிகளும் அமித் ஷா கருத்தை எதிர்க்கட்சிகள் திரித்து சர்ச்சையாக்குவதாகக் கூறி பா.ஜ.கவும் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டன. இதனால் பாராளுமன்ற வளாகத்தில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது.

இந்நிலையில், உள்துறை அமைச்சர் அமித் ஷாவை பதவி விலகவேண்டும் என்ற கோஷங்கள் வலுத்து வருகின்றன.

### பா.ஜ.க. எம்.பிக்கள் போராட்டம்

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று (19) திரண்ட பா.ஜ.க. எம்.பிக்கள், ''பாபா சாஹேப் அம்பேத்கர் நமக்கு வழிகாட்டினார். ஆனால், காங்கிரஸ் தவறான பாதையில் இட்டுச்சென்றது'' என்ற பதாகைகளை ஏந்தியவாறு காங்கிரஸை குற்றஞ்சாட்டினர். ஊடகங்களிடம் பேசிய மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங், “காங்கிரஸ் குடும்பத்தினர் தங்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கிக் கொண்டனர். ஆனால், பாபா சாஹேப் அம்பேத்கருக்கு அவர்கள் வழங்கவில்லை. அதன்மூலம் பாவம் செய்தனர். அந்தப் பாவத்தைப் போக்க அவர்கள் ஒரு நாள் மௌன விரதம் இருக்க வேண்டும்.

அமித் ஷா பேச்சை காங்கிரஸ் திரித்துப் பேசுகிறது. அம்பேத்கருக்கு பாரத் ரத்னா விருது வழங்கியது பா.ஜ.க. அரசுதான். அமித் ஷா பேச்சை அரசியலாக்கி அதன்மூலம் தனக்கு பிரபல்யத்தைத் தேடிக்கொள்ள காங்கிரஸ் முயற்சிக்கிறது” - என்றார்.

### காயமடைந்த பா.ஜ.க. எம்.பி.

போராட்டத்தின்போது பா.ஜ.க. எம்.பி. பிரதாப் சாரங்கி காயமடைந்துள்ளார். பாராளுமன்றத்துக்கு வந்த காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி ஒரு எம்.பியை தள்ளிவிட அவர் தன் மீது விழுந்ததால் தனக்கு காயம் ஏற்பட்டதாக சாரங்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.

### காங்கிரஸ் கோஷம்

காங்கிரஸ் கட்சியினர் பாராளுமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் பங்கேற்று அமித் ஷாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

இத்தகைய சலசலப்புகளுக்கிடையே மக்களவை, மாநிலங்களவை இரண்டும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### அமித் ஷா பேசியது என்ன?

முன்னதாக, மாநிலங்களவையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தின் முடிவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசும்போது, ''அம்பேத்கர்.. அம்பேத்கர்.. அம்பேத்கர்'' என முழக்கமிடுவது இப்போது பெஷனாகிவிட்டது. இதற்குப் பதிலாக கடவுளின் பெயரை இவ்வளவு தடவைகள் உச்சரித்திருந்தால், சொர்க்கத்தில் அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும். அம்பேத்கரின் பெயரை காங்கிரஸ் எடுத்துக்கொள்வதில் பா.ஜ.க. மகிழ்ச்சியடைகிறது. ஆனால், அவர் மீதான உண்மையான உணர்வுகள் குறித்தும் காங்கிரஸ் பேச வேண்டும்” - எனப் பேசியிருந்தார்.

### எதிர்க்கட்சிகள் கண்டனம்

அம்பேத்கர் குறித்த மத்திய அமைச்சர் அமித் ஷாவின் பேச்சுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றன. மேலும், அம்பேத்கரை மத்திய அமைச்சர் அமித் ஷா அவமதித்துவிட்டதாகக் கூறி, பாராளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் அம்பேத்கரின் புகைப்படத்தை கையில் ஏந்திப் போராட்டம் நடத்தினர்.

### மக்களவையில், “ஜெய் பீம்'' முழக்கம்

மேலும், மக்களவையில் “ஜெய் பீம், ஜெய் பீம்” என்று எதிர்க்கட்சி எம்.பிக்கள் முழக்கமிட்டனர். மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். அப்போது அவையில், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் தேசியத் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, அம்பேத்கரின் புகைப்படத்தை எடுத்து உயர்த்திக் காட்டினார்.



### தமிழகத்திலும் எதிர்ப்பு

“அதிக பாவங்கள் செய்பவர்கள்தான் புண்ணியத்தைப் பற்றி கவலைப்பட வேண்டும். நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாப்புப் பற்றியும் கவலைப்படுவோர் அம்பேத்கர் பெயரைத்தான் சொல்வார்கள். சொல்ல வேண்டும்” - என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கண்டனத்தைப் பதிவுசெய்திருந்தார்.


மேலும், அம்பேத்கரை அவமதித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து தி.மு.க. சார்பில் நேற்று (19) தமிழ்நாடு முழுக்கவும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதேபோல் வி.சி.கவினர் ஆங்காங்கே ரயில் மறியல் போராட்டம் நடத்தியுள்ளனர்.

அம்பேத்கரை இழிவுபடுத்திய அமித்ஷாவை உள்துறை அமைச்சர் பொறுப்பில் ஒரு விநாடியும் நீடிக்கத் தகுதியற்றவர். அவரை அமைச்சரவையிலிருந்து வெளியேற்ற வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட, மாநகர, நகர, பேரூர் மற்றும் மத்திய தலைநகர்களில் இன்று (20) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதென அக்கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிவித்துள்ளார்.

### கார்கேவின் காலில் காயம்

பா.ஜ.க. எம்.பிக்கள் தள்ளியதால் முழங்காலில் காயம் ஏற்பட்டுள்ளதாக மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவுக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் அளித்துள்ளார்.

அக்கடிதத்தில், இண்டியா கூட்டணி எம்.பிக்கள் நேற்று (19) காலை பேரணியில் ஈடுபட்டபோது பா.ஜ.க. எம்.பிக்களால் நான் தள்ளப்பட்டேன். இதனால் நான் நிலைகுலைந்து தரையில் உட்கார வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டேன். இதனால் ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்திருக்கும் எனது முழங்கால்களில் காயம் ஏற்பட்டுள்ளது. பின்னர் காங்கிரஸ் எம்.பிக்கள் கொண்டு வந்த நாற்காலியில் அமர்ந்தேன். மிகுந்த சிரமத்துடன் சக எம்.பிக்களின் உதவியுடன் காலை 11 மணிக்கு நான் எனது இல்லத்துக்குத் திரும்பினேன். மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா இதுகுறித்து உரிய விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார்.



# மும்பை படகு விபத்தில் 13 பேர் பலி; 101 பேர் மீட்பு!

மும்பை கடற்கரைப் பகுதியில் சுற்றுலாப் படகு மீது, கடற்படையின் அதிவேக ரோந்து படகொன்று மோதியதில் 13 பேர் உயிரிழந்தனர். 101 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அங்கு தேடும் பணியில் கடற்படை மற்றும் கடலோர காவல் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மும்பை அருகேயுள்ள எலிபென்டா தீவில் புகழ்பெற்ற கர்பரி குகைகள் உள்ளன. இதனைப் பார்வையிடுவதற்காக 100இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள், ‘நீல்கமல்’ என்ற படகு மூலம் மும்பையின் கேட்வே ஒவ் இந்தியா பகுதியிலிருந்து எலிபென்டா தீவு நோக்கி நேற்றுமுன்தினம் மாலை சென்றுள்ளனர்.

அப்போது அவ்வழியாக ரோந்து சென்ற கடற்படையின் படகு கட்டுப்பாட்டை இழந்து பயணிகள் படகு மீது அதிவேக மோதியது. இதில் பயணிகள் படகு பலத்த சேதமடைந்து, ஒரு பக்கமாக சாய்ந்தது. இதனால் படகிலிருந்த பயணிகள் சிலர் கடலில் வீழ்ந்துள்ளனர்.

தகவல் அறிந்ததும் கடற்படை மற்றும் கடலோர காவல் படையினர் படகுகளில் விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கடலில் விழுந்த 13 பேர் சடலங்களாக மீட்கப்பட்ட நிலையில், 101 பயணிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

# எச்சரிக்கையையும் மீறி அமெரிக்காவுக்கு படையெடுக்கும் புலம்பெயர்ந்தோர்



அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி பொறுப்பேற்கவுள்ள நிலையில், ஆயிரக்கணக்கான சட்ட விரோத புலம்பெயர்வோர் தெற்கு மெக்சிகோவிலிருந்து அமெரிக்காவில் நுழையும் பயணத்தைத் தொடங்கியுள்ளனர்.


வறுமை, பொருளாதார நெருக்கடி, உள்நாட்டுக் குழப்பங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளைச் சேர்ந்த மக்கள் சட்டவிரோதமாக அமெரிக்காவில் நுழைவது தொடர்ந்து வருகிறது. தாம் ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் அனைத்து சட்டவிரோத புலம்பெயர் மக்களையும் இராணுவத்தின் உதவியோடு நாடு கடத்தப் போவதாக டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் அதிரடியாக அறிவித்தார்.

ஆனால், அவரது எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் தெற்கு மெக்சிகோவில் பல்லாயிரம் சட்டவிரோத புலம்பெயர்வோர் கூடினார்கள். வெனிசூலா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவை நோக்கி தங்களது பயணத்தைத் தொடங்கியுள்ளனர். புலம்பெயர் மக்கள் நெடுஞ்சாலைகளிலுள்ள சோதனைச்சாவடிகள் மூலம் தடுத்தும் அவர்கள் குறுக்கு வழியாக அமெரிக்காவுக்குள் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். அமெரிக்காவில் ஒரு கோடியே 10 இலட்சம் பேர் ஆவணங்களின்றி சட்டவிரோதமாக வசித்து வருகின்றனர்.

மெக்சிகோ எல்லை வழியாக நுழையும் சட்டவிரோத குடியேறிகளைத் தடுக்க தமது முந்தைய ஆட்சியில் ட்ரம்பால் முழுமையாக இயலவில்லை. ஆனால், இரண்டாவது முறையாக தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் அவர்கள் அனைவரையும் வெளியேற்றப் போவதாக ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்கவுள்ளார். தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் அரசு கடைப்பிடிக்கும் புலம்பெயர் கொள்கையை முடிவுக்குக் கொண்டுவரவிருப்பதால் புலம்பெயர் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

# இந்திய முட்டைகளுக்கு அனுமதி மறுத்த கட்டார் - ஓமான்



கட்டாரைத் தொடர்ந்து ஓமானும் இந்திய முட்டை இறக்குமதிக்கு அனுமதி மறுத்துள்ளதால், சுமார் 5 கோடி ரூபா (இந்திய ரூபாபடி) மதிப்புள்ள, 1.20 கோடி முட்டைகள் அடங்கிய கப்பல் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஓமானின் அறிவிப்பால் முட்டை ஏற்றுமதி மேலும் பாதிக்கும் அபாயமுள்ளதால், இந்திய ஏற்றுமதியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் கட்டார் அரசு எடை குறைந்த இந்திய முட்டைகளுக்குத் தடை விதித்திருந்தது. இந்நிலையில், ஓமானும் இந்திய முட்டைக இறக்குமதியை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

# இயக்குநர் கிறிஸ்டோபர் நோலனுக்கு ‘சேர்’ பட்டம்!





திரைத்துறையில் சிறப்பான பங்களிப்பைச் செலுத்தி வரும் ஹொலிவுட் இயக்குநர் கிறிஸ்டோபர் நோலன் மற்றும் அவரது மனைவி எம்மா தோமஸுக்கு ‘சேர்’ பட்டம் வழங்கி பிரித்தானிய மூன்றாவது சார்ள்ஸ் மன்னர் கௌரவித்துள்ளார்.

பல்வேறு துறைகளில் சாதனை புரியும் அல்லது நாட்டுக்காக சேவை செய்யும் தனிநபர்களுக்கு பிரித்தானிய மன்னர் அல்லது ராணியால் ‘சேர்’ பட்டம் (நைட்ஹூட்) வழங்கப்படுகிறது. இதைப் பெற்றவர்கள், தங்கள் பெயருக்கு முன்பு ‘திரு’ என்பதற்குப் பதில் ‘சேர்’ என போட்டுக்கொள்ளலாம். இந்த வகையில் ஹொலிவுட்டின் புகழ்பெற்ற இயக்குநர் கிறிஸ்டோபர் நோலனுக்கும் அவரது மனைவிக்கும் ‘சேர்’ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நோலனின் பெரும்பாலான படங்களுக்கு அவரது மனைவி தயாரிப்பாளராக இருந்துள்ளார்.

பிரித்தானியாவின் பெக்கிங்ஹாம் அரண்மனையில் ‘சேர்’ பட்டம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இது தொடர்பாக பிரித்தானிய அரச குடும்பத்தின் அதிகாரபூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில், “நோலன் மற்றும் அவரது மனைவி எம்மா தோம்ஸன் ‘சேர்’ பட்டத்தால் கௌரவிக்கப்படுகிறார்கள். ’தி டார்க் நைட்’, ‘ஓப்பன்ஹெய்மர்’ (oppenheimer) போன்ற ப்ளொக் பஸ்டர் படங்களை இணைந்து தயாரித்து திரையுலகில் சிறப்பான பங்களிப்பைச் செலுத்தியதற்காக இந்தத் தம்பதியினருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தச் சந்திப்பின்போது, நோலன் இயக்கத்தில் கடைசியாக வெளியான ‘ஓப்பன்ஹெய்மர்’ படம் குறித்த தனது பாராட்டை மன்னர் சார்ள்ஸ் தெரிவித்தார்.

# மலையக மக்களுக்கு என்ன தேவையென பெருந்தோட்ட நிறுவனங்களே தீர்மானிக்கின்றன

## ஜீவன் தொண்டமான் எம்.பி. சபையில் காட்டம்



''அரசாங்கத்தின் சலுகைகளை யாருக்கு வழங்க வேண்டும் என்று பெருந்தோட்ட நிறுவனங்களே தீர்மானிக்கின்றன. இது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். பரம்பரைபரம்பரையாக நாங்கள் மலையகத்துக்கு ஏதும் செய்யவில்லை என்று குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது'' என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (18) நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்திய விஜயத்தை மேற்கொண்டமைக்கு வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன். 2023 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த போது நானும் இந்தியாவுக்கு சென்றிருந்தேன். அப்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் மலையகத்துக்கான இந்திய வீட்டுத்திட்டம் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன்.

இந்திய வீட்டுத்திட்டத்தின் ஊடாக மலையகத்துக்கு 14 ஆயிரம் வீடுகள் கிடைக்கப்பெற்றன. இந்த திட்டம் தொடர்ந்து இழுபறி நிலையில் இருப்பதற்கு அரசாங்கங்களை மாத்திரம் குறை கூற முடியாது. 1948 ஆம் ஆண்டு முதல் இன்று வரை உரிமைகளுக்காகவே நாங்கள் போராடுகிறோம். ஒரே நாளில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இதனை அரசாங்கமும் தற்போது விளங்கிக் கொண்டிருக்கும் என்று கருதுகிறேன்.

மலையக பகுதியில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு அரசியல்வாதிகள் மாத்திரமே காரணமென குறை கூறப்படுகிறது. முதலில் உண்மையான குறைகளை கண்டுகொள்ள வேண்டும்.

பெருந்தோட்டங்களில் தோட்ட நிர்வாகங்களே ஆதிக்கம் செலுத்துகின்றன. ஒரு தோட்டத்தில் 100 குடும்பங்கள் வாழ்வார்களாயின் அவர்களின் 10 குடும்பங்கள் மாத்திரமே தோட்டங்களில் தொழில் புரிகிறார்கள்.

அரச சலுகைகள் வழங்கப்படும் போது தோட்ட நிருவாகங்களே அவற்றை யாருக்கு வழங்க வேண்டும். அதாவது, தோட்டத்தில் தொழில் செய்பவர்களுக்கு வழங்க வேண்டுமா, இல்லையா என்பதை தீர்மானிக்கின்றன. அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் அனைவரும் உள்ளடங்குகிறார்கள் என்று ஆளுந்தரப்பினர் குறிப்பிடுவதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

பெருந்தோட்ட பகுதிகளில் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை அமுல்படுத்தும்போது பொதுவான கொள்கையை செயற்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தியுள்ளோம். பெருந்தோட்டங்களில் தொழில் செய்பவர்களைப்போல், தொழில் செய்யாதவர்களுக்கும் அஸ்வெசும திட்டம் மற்றும் தற்போது பாடசாலை மாணவர்களுக்கு வழங்க தீர்மானித்துள்ள 6000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

பெருந்தோட்ட மக்கள் இலங்கை பிரஜைகளே தவிர பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரஜைகள் அல்ல. அரசாங்கத்தின் சலுகைகளை யாருக்கு வழங்க வேண்டும் என்று பெருந்தோட்ட நிறுவனங்கள் தீர்மானிக்க முடியாது. ஆகவே இவ்விடயம் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

எவரையும் குறை கூறி, விமர்சித்து நான் அரசியல் செய்யவில்லை. நாங்கள் பரம்பரைபரம்பரையாக மலையகத்துக்கு ஏதும் செய்யவில்லை என்று குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. சிறந்த மாற்றத்துக்காகவே மக்கள் புதியவர்களை தெரிவு செய்துள்ளார்கள். ஆகவே மக்களின் ஆணைக்கமைய செயற்படுங்கள். எமது மக்களின் முன்னேற்றத்துக்காக ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றார்.

# ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு



(செ.திவாகரன், எஸ்.கணேசன்)

திம்புள்ளை - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை பகுதியில் ரயிலில் மோதுண்டு குடும்பஸ் தரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (19) அதிகாலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த இரவு நேர ரயிலில் கொட்டகலை ரயில் நிலையத்துக்கருகாமையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கொட்டகலை, கங்கைபுரத்தைச் சேர்ந்த வெள்ளசாமி ஜெயக்குமார் (வயது 40) என்ற ஒரு பிள்ளையின் தந்தை என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கொட்டகலை ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ரயில் நிலையத்தின் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

குறித்த நபர் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது ரயிலில் தவறுதலாக மோதுண்டு இறந்தாரா என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ளை - பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அஸ்வெசும கொடுப்பனவை இலகுவாகப் பெற ஏற்பாடு

## பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு



அஸ்வெசும உதவித்தொகையைப் பெறத் தகுதி பெற்றும் இதுவரையும் வங்கியில் வைப்பிலிடப்பட்ட கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு அதனை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்துக்கமைவாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வழிகாட்டலுடன் மக்களுக்கு மேலும் நலன் சேர்க்கும் வகையில் மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்ட அஸ்வெசும நலத்திட்டங்களினூடாக பயனாளிகளுக்கு பயனை அடைந்து கொள்ள முடிவதோடு அடையாள அட்டை இன்றி வங்கியில் முடக்கப்பட்ட பணத்தைப் பெற்றுக் கொள்வதில் குறிப்பாக மலையக மக்கள் பல்வேறு தடங்கல்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளார்கள்.

இக்கொடுப்பனவுகளை வங்கியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான உங்கள் பிரதேச கிராம உத்தியோகத்தரூடாக தற்காலிக அடையாள அட்டையொன்றைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அஸ்வெசும உதவித்தொகையைப் பெற முடியுமென பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருட்களுடன் ஒருவர் கைது

(எம்.ஏ.அமீனுல்லா)



கண்டி, கடுகன்னாவ பிரதேசத்திலுள்ள விடுதியொன்றின் அறையொன்றை வாடகைக்கு எடுத்து அங்கு, போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த குருந்துகொல்ல, வரெல்லகம பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவர் நேற்று முன்தினம் (18) கைது செய்யப்பட்டதாகவும் அவரிடமிருந்து சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் மற்றும் ஹேஷ் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் கடுகன்னாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட பணியக அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், கடுகன்னாவ பொலிஸார் சந்தேகநபர் தங்கியிருந்த அறைக்கு சென்று சோதனையிட்டபோது ஐஸ் போதைப்பொருள் 69 கிராம், ஹேஷ் 72 கிராம் மற்றும் 45 பொலித்தீன் பை, முஸ்லிம் பெண்கள் அணியும் அபாயா ஆடை, இரட்டை முனைகள் கொண்ட வாள் மற்றும் மூன்று கடவுச்சீட்டுகள் என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர், கடந்த 17ஆம் திகதி குறித்த விடுதிக்கு வந்துள்ளதுடன், அவரை சந்திக்க வந்த பலர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகநபரின் கையடக்கத் தொலைபேசியையும் கைப்பற்றியுள்ள பொலிஸார், நீதிமன்ற உத்தரவைப் பெற்ற பின்னர் அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் குறித்து விசாரணை செய்வதற்கு பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

இந்நிலையில் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# உயிரிழந்த நிலையில் சிறுத்தை மீட்பு

(எஸ்.கணேசன்)



ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போடைஸ் தோட்டப்பகுதியில் உயிரிழந்த நிலையில் சிறுத்தையொன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (18) பிற்பகல் மீட்கப்பட்ட குறித்த சிறுத்தையின் தலை மற்றும் கால்கள் என்பன வெட்டி அகற்றப்பட்ட நிலையில் காணப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் சிறுத்தையொன்று உயிரிழந்து கிடப்பதாக தோட்டத் தொழிலாளர்களால் ஹட்டன் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் நல்லதண்ணி வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் மீட்கப்பட்ட சுமார் 10 வயது மதிக்கத்தக்க சிறுத்தையின் உடல் ஹட்டன் நீதவான் நீதிமன்ற உத்தரவின்பேரில் உடற்கூராய்வு பரிசோதனைக்காக ரன்தெனிகல வனவிலங்கு கால்நடை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பசறையில் அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம் மீட்பு

(ராமு தனராஜா)

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பசறை - பதுளை வீதி கோயில் கடைக்கு அருகாமையில் 45-50 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை - பதுளை வீதி கோயில் கடைக்கும் பசறை பால் சேகரிப்பு நிலையத்துக்கும் இடையே வீதியோரமாக குறித்த நபரின் சடலம் காணப்பட்டதுடன் அவ்விடத்தில் பாதணிகளும் பை ஒன்றும் காணப்பட்டுள்ளன.

உயிரிழப்புக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லையெனத் தெரிவித்த பசறை பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# தேசிய மக்கள் சக்தி கட்சிக்காரர்களென கடை கோரிய வியாபாரிகள்: சட்டரீதியாக அகற்றப்பட்ட பரிதாபம்!

(ஜோசப் நயன்)





மன்னார் நகரசபைக்குச் சொந்தமான பிரதேச செயலக வீதியில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நகரசபையால் நாள்தோறும் அனுமதி வழங்கப்பட்டு அவற்றுக்கான பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டு வருகின்றது.

இருப்பினும், வருட இறுதியில் குத்தகை அடிப்படையில் கடைகள் விற்பனை செய்வதற்காக 10-15 நாட்கள் குறித்த நாள் வியாபாரிகளை வேறு இடங்களில் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகரசபை கோரும். அவ்வாறு நகரசபை கோரும்போது நாள் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் வேறு இடங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருட இறுதிச் சந்தை நிறைவடைந்ததும் மீண்டும் அதே பகுதியில் நகரசபையின் அனுமதியுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்.

ஆனால், இம்முறை அப்பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 30க்கு மேற்பட்ட நாள் வியாபாரிகள் நகரசபையின் கோரிக்கையை ஏற்று வேறு இடங்களுக்குச் சென்றபோதிலும் தங்களை காணொளி மூலம் பகிரங்கமாக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் என வெளிப்படுத்திய சிலர் அரசியல் தலையீட்டை உட்புகுத்தி குறித்த கடைகளிலிருந்து வெளியேற மறுத்தனர்.

இதனையடுத்து, குறித்த விடயம் சட்டவிரோதம் என்ற அடிப்படையில் மன்னார் பொலிஸாரின் உதவியுடன் கடைகளை மன்னார் நகரசபை அகற்ற முற்பட்டவேளை சில வியாபாரிகள் பொலிஸார் மற்றும் நகரசபை செயலாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், தாங்கள் ஆளுநரிடம் பேசிவிட்டதாகவும் வியாபார நிலையங்களை மூட முடியாதெனவும் தெரிவித்தனர்.

அப்பகுதிக்கு வருகை தந்த தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட இணைப்பாளரெனத் தெரிவித்த நபர் சம்பந்தமே இல்லாமல் குறித்த விடயத்தில் தலையிட்டதுடன், 45 வியாபாரிகள் தொழில் செய்த குறித்த பகுதியில் வெறுமனே தங்கள் கட்சி சார்பான 11 பேருக்கும் கடைகள் வழங்க ஆளுநரிடம் அனுமதி பெறப்பட்டு விட்டதாகவும் அது தொடர்பில் எழுத்துமூலம் ஆளுநர் தெரியப்படுத்துவார் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் 11 பேர் தவிர்ந்த ஏனைய வியாபாரிகள் தாங்கள் என்ன செய்வதென குறித்த இணைப்பாளருடன் முரண்பட்ட நிலையில் அவர்களை மரியாதை குறைவாகப் பேசியுள்ளார்.

அதேநேரம் தான் பேசிய விடயங்களை காணொளிகளாக பதிவுசெய்யாமல் நிறுத்தியதுடன், காணொளி எடுக்க முயன்ற ஊடகவியலாளரின் தொலைபேசியையும் தட்டிவிட முயற்சி செய்ததுடன் நகரசபை செயலாளரை தனது பணியாளர்போல் தனது வாகனத்தில் அழைத்துச் செல்லவும் முற்பட்டார்.

எழுத்துமூலமான எந்தவொரு அறிவுறுத்தலும் ஆளுநரிடமிருந்து வழங்கப்படாவிட்டால் என்னால் சட்டவிரோதமான இந்தக் கடைகளுக்கு அனுமதி வழங்க முடியாதென நகரசபை செயலாளர் பகிரங்கமாகத் தெரியப்படுத்தினார்.

தேசிய மக்கள் சக்தியின் பெயரைப் பயன்படுத்தி ஆளுநர் வரை சென்ற நிலையில் - குறித்த அனுமதியை வழங்க ஆளுநரும் மறுத்த நிலையில் தற்போது குறித்த 11 வியாபாரிகளும் குத்தகைக்கு விடப்படும் பகுதியிலிருந்து வெளியேறியுள்ளனர்.

ஆண்டுதோறும் மன்னார் நகரசபைக்கு குறித்த வீதியில் 10 தொடக்கம் 15 நாட்கள் பண்டிகைக் கால வியாபார நடவடிக்கைக்கு கடைகள் குத்தகைக்கு வழங்கப்படுவதனால் சுமார் 02 கோடி வரை வருமானம் கிடைக்கப்பெறுவதுடன், குறித்த வருமானத்தினூடாக உரிய விதமாக அபிவிருத்தி நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறித்த 11 வியாபாரிகள் வெளியேற மறுத்த பகுதியில் மாத்திரம் வருட இறுதிச் சந்தையின்போது கடைகள் 30 தொடக்கம் 40 இலட்சம் வரையில் விற்பனையாகும்.

இவ்வாறு ஒரு கட்சி சார்பானவர்களுக்காக கடைகளை அப்புறப்படுத்தாமல் விடுவதனூடாக பாரியளவு வருமானம் நகரசபைக்கு இழக்கப்படும் என்பதுடன், குத்தகைக்கு வழங்கும் செயற்பாடும் முழுமையாக பாதிப்படையும் என்பதன் அடிப்படையில் குறித்த 11 வியாபாரிகளும் ஆளுநர் வரை சென்றபோதிலும் அப்பகுதியிலிருந்து அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோயால் 110 பேர் பாதிப்பு!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் அறிவிப்பு

(பு.கஜிந்தன்)



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக இதுவரை 110 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எலிக்காய்ச்சல் காரணமாக தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 28 பேரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 08 பேரும் சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 06 நோயாளர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் 05 நோயாளர்களும் எலிக்காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் இந்நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை. இதுவரை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்நோய் காரணமாக 07 இறப்புகள் சம்பவித்துள்ளன.

எலிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காக தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. நேற்றுவரை ஏறத்தாழ 7 ஆயிரத்து 200 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் எலிக்காய்ச்சல் நோயாளர்களை இனங்காண்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலுள்ள கால்நடைகளில் இக்கிருமித்தொற்று உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்காக கொழும்பிலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து குழு ஒன்று யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளது.

இக்குழு பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்குச் சென்று கால்நடைகளிலிருந்து ஆய்வுகளை மேற்கொண்டு குருதி மாதிரிகளை எடுத்துச்செல்லவுள்ளது - என்றும் தெரிவித்தார்.

# ஆழியவளையில் இரவோடு இரவாக இடம்பெறும் பாரிய மணல் கொள்ளை

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(பு.கஜிந்தன்)



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியில் இரவோடு இரவாக சட்டவிரோத மணல் அகழப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆழியவளை பகுதியில் மணல் சட்டவிரோதமாக அகழப்படுவதாக பொலிஸாருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியபோதும் அவர்களால் குறித்த மணல் கொள்ளையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நள்ளிரவு வேளையில் பகோ இயந்திரம் கொண்டு ரிப்பர்கள் மூலம் பாரிய மணல் கொள்ளையில் மணல் கடத்தல்காரர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகவும் பாதைகளை அழித்து மணல் வளத்தைச் சூறையாடிச் செல்வதால் தற்பொழுது பாதைகளிலும் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர் .

மணல் மேடுகளை அழிப்பதால் குடிமனைகளுக்குள் கடல் நீர் புகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. கிராம அலுவலரூடாக மருதங்கேணி பிரதேச செயலர் மற்றும் மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவித்தும் இதுவரை மணல் கொள்ளை தடுத்து நிறுத்தப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொலிஸாருடன் இணைந்து ஆழியவளை கிராமத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தி தமது கிராமத்தைப் பாதுகாக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெள்ள நிவாரண உதவிகள்









(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் அண்மைய மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, நெடுங்கேணி, கரடிப்பிலவு ஆகிய கிராமங்களிலுள்ள 56 குடும்பங்களுக்கு ரூபா 2,80,000 பெறுமதியான அத்தியாவசிய உலருணவுப் பொருட்கள் கரடிப்பிலவு முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் (18) காலை 10.30 மணியளவில் அறநெறிப் பாடசாலையின் இணைப்பாளர் த.ஜீவா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.

# வினிசியஸ் ஜூனியர் -பொன்மதி சிறந்த வீர வீராங்கனை



(ரமணி)

2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த பீபா ஆடவருக்கான விருதை பிரேஸிலின் முன்கள வீரர் வினிசியஸ் ஜூனியர் வென்றார். இந்த விருதைப் பெற்ற முதல் பிரேஸில் வீரர் சக வீரர் நெய்மர் மூன்றாவது இடத்தைப் பெற்றார்.

ஸ்பெயின் மிட்ஃபீல்டர் ஐடானா பொன்மதி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சிறந்த மகளிர் வீராங்கனைக்கான விருதை வென்றார்.

உலக உதைபந்தாட்ட நிர்வாகக் குழுவான பீபா, கட்டார், டோஹாவில் பீபா 2024 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட விருது விழாவை நடத்தியது. அங்கு ரசிகர்கள், கப்டன்கள் , தேசிய அணிகளின் பயிற்சியாளர்கள், ஊடகங்களின் வாக்குகளின் அடிப்படையில் விருதுகள் அறிவிக்கப்பட்டன.

வினிசியஸ் ஜூனியர் 48 புள்ளிகளைப் பெற்றிருந்தார். அதே நேரத்தில், மான்செஸ்டர் சிட்டியின் ஸ்பெயின் மிட்பீல்டர் ரோட்ரி 43 புள்ளிகளைப் பெற்றார். ரியல் மாட்ரிட்டின் இங்கிலீஷ் மிட்பீல்டர் ஜூட் பெல்லிங்ஹாம் 37 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

விதியின்படி ஒவ்வொரு வாக்குக்கும் முதல் தேர்வு ஐந்து புள்ளிகளையும் இரண்டாவது எண்ணுக்கு மூன்று புள்ளிகளையும் கடைசியாக ஒரு புள்ளியையும் கணக்கிடுவதால், மெஸ்ஸி 25 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தைப் பிடித்தார்.

வினிசியஸ் ஜூனியர் 2023 /2024 சீசனில் ரியல் மாட்ரிட்டுக்காக 39 போட்டிகளில் விளையாடி 24 கோல்களை அடித்தார்.

பார்சிலோனாவின் ஸ்பானிஷ் நட்சத்திரம் பொன்மதி இந்த விருதை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வென்ற ஆறாவது வீராங்கனை ஆவார். யூரோ மகளிர் நேஷன்ஸ் லீக்கை ஸ்பெயின் வெல்ல பொன்மதி உதவினார். மேலும், பார்சிலோனா யூரோ மகளிர் சம்பியன்ஸ் லீக் பட்டத்தை வென்றது.

26 வயதான பொன்மதி ஜாம்பியாவின் பார்பரா பண்டா (39 புள்ளிகள்) , நோர்வேயின் கரோலின் கிரஹாம் ஹேன்சன் (37 புள்ளிகள்) ஆகியோரை விட 52 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

ரியல் மாட்ரிட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் கார்லோ அன்செலோட்டி சிறந்த ஆடவர் பயிற்சியாளருக்கான விருதையும் செல்சியின் எம்மா ஹேய்ஸ் சிறந்த மகளிர் பயிற்சியாளருக்கான விருதையும் வென்றனர்.

சிறந்த ஆடவர் கோல்கீப்பர் விருது ஆர்ஜென்ரீனா எமிலியானோ மார்டினெஸுக்கும் சிறந்த பெண்கள் கோல்கீப்பராக அமெரிக்க வீராங்கனையான அலிசா நாஹெர்க்கும் வழங்கப்பட்டது.

உலகக் கிண்ணத்தை வென்ற பெபெட்டோ வழங்கிய ஃபேர் ப்ளே விருதை பிரேசிலின் தியாகோ மியா வென்றார். மே மாதம் பிரேசிலிய வெள்ளத்தின் போது அவரது வீர முயற்சிகளுக்காக இன்டர் மிட்ஃபீல்டர் விருதைப் பெறுகிறார்.

பிரீமியர் லீக்கில் எவர்டனுக்கு எதிராக மான்செஸ்டர் யுனைட்டெட்டின் அலெஜான்ட்ரோ கர்னாச்சோ தனது சிறந்த ஓவர்ஹெட் கோலுக்காக புஸ்காஸ் விருதை வென்றார்.

பிரேஸிலின் மார்டா (ஆர்லாண்டோ பிரைட்) 2024 ஆம் ஆண்டுக்கான மகளிர் கால்பந்தில் அடித்த சிறந்த கோலுக்கான முதல் மார்டா விருதை வென்றார். ஒரு வீராங்கனை தனது சொந்தப் பெயரில் விருதை வெல்வதை நீங்கள் அடிக்கடி பார்க்க மாட்டீர்கள்.


பிரேஸிலிய கிளப் வாஸ்கோ டி காமாவின் தீவிர ரசிகரான கில்ஹெர்ம் காந்த்ரா மௌரா, ரசிகர் விருதை வென்றார்.

எட்டு வயதான கில்ஹெர்ம் (குய்), எபிடெர்மொலிசிஸ் புல்லோசா எனப்படும் அரிய மரபணு நிலையில் பாதிப்புற்று நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டு கோமா நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இறுதியாக 16 நாட்களுக்குப் பிறகு எழுந்ததும் அவரும் அவரது தாயும் மீண்டும் இணையும் வீடியோ விரைவில் வைரலானது.

இளம் பிரேஸிலியன் வாஸ்கோடகாமாவின் தீவிர ரசிகராவார். மேலும் கிளப்பின் அப்போதைய நட்சத்திர வீரர் கேப்ரியல் பெக்கால் அவர் குணமடைய உதவினார். அவர் அவரை மருத்துவமனையில் தவறாமல் சந்தித்தார்.

அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறியவுடன், குய் மற்ற வாஸ்கோ அணிக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். அத்துடன், ஒகஸ்ட் 2023 இல் ஒரு விளையாட்டுக்கான சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.







# ஜப்பானின் மகளிர் உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளரானார் நீல்சன்

ஜப்பான் மகளிர் உதைபந்தாட்ட அணி இரண்டாவது தடவையாக மகளிர் உலகக் கிண்ணத்தை வெல்ல முடியுமென்று புதிய பயிற்சியாளர் நில்ஸ் நீல்சன் புதன்கிழமை அறிவித்தார் .

ஒகஸ்ட் மாதம் தனது ஒப்பந்தத்தின் முடிவில் வெளியேறிய ஃபுடோஷி இகேடாவுக்குப் பிறகு நீல்சன் பதவியேற்றார்.53 வயதான இவர் ஜப்பானின் முதல் வெளிநாட்டு பயிற்சியாளராவார் .

நீல்சன் டென்மார்க்கை 2017 ஐரோப்பிய சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு வழிநடத்தினார். 2015 முதல் உலகக் கிண்ண அல்லது ஒலிம்பிக் அரையிறுதிக்கு எட்டாத ஜப்பான் அணியை நீல்சன் பொறுப்பேற்றுள்ளார்.

கிரீன்லாந்தில் பிறந்த நீல்சன் முன்பு டென்மார்க் ,சுவிட்சர்லாந்து ஆகிய தேசிய அணிகளுக்குப் பொறுப்பான பிறகு மான்செஸ்டர் சிட்டியின் மகளிர் அணி தொழில்நுட்ப இயக்குநராகப் பணியாற்றினார்.



கடந்த ஆண்டு உலகக் கிண்ண மற்றும் இந்தக் கோடையில் நடந்த பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் இரண்டிலும் ஜப்பான் காலிறுதியில் தோல்வியடைந்தது.

# பதவி துறப்பார் ரோஹித்



இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் ரோஹித் சர்மா கடந்த 13 இன்னிங்ஸ்களில் 11.83 சராசரியாக ஓர் அரைச்சதம் உட்பட 152 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார். இது தொடர்ந்தால் அவர் அவுஸ்திரேலிய பயணம் முடிந்த பிறகு கப்டன் பதவியிலிருந்து விலகக் கூடுமென முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் விமர்சித்துள்ளார்.

அடுத்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ரோஹித் சர்மாவின் மோசமான ஆட்டம் தொடர்ந்தால் அவுஸ்திரேலியாவில் நடந்து வரும் பார்டர்-கவாஸ்கர் டிராபி தொடரின் முடிவில் ரோஹித் சர்மா தனது கப்டன் பதவியில் இருந்து விலக வாய்ப்புள்ளது’ என்று இந்திய பேட்டிங் ஜாம்பவான் சுனில் கவாஸ்கர் செவ்வாய்க்கிழமை ஓர் அதிர்ச்சியூட்டும் அறிக்கையை வெளியிட்டார்.

# பயத்லானில் நடந்த முறைகேடுக்கு மன்னிப்புக் கேட்டார் கோப்

சர்வதேச பயத்லான் யூனியனின் தற்போதைய பொதுச்செயலாளர், அமெரிக்க கூட்டமைப்புக்குள் பாலியல் துஷ்பிரயோகம், முறையான அலட்சியம் உள்ளிட்ட பல தசாப்தங்களாக பயாத்லெட்டுகளை தவறாக நடத்துவதை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து பகிரங்கமாக வருத்தம் தெரிவித்தார்.

செவ்வாயன்று நடந்த ஒரு மெய்நிகர் சந்திப்பில் மாக்ஸ் கோப் அமெரிக்க பயத்லானில் தனது தலைமையின் போது துஷ்பிரயோகத்துக்கு ஆளான விளையாட்டு வீரர்களிடம் மன்னிப்புக் கோரினார். அவரது அறிக்கை அசோசியேட்டட் பிரஸ் அறிக்கையின் பின்னணியில் வந்தது. இது நிறுவனத்துக்குள் பல ஆண்டுகளாக தவறான நடத்தை மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றை அம்பலப்படுத்தியது.

‘‘அமெரிக்க பயத்லானில் நான் இருந்த காலத்தில் விளையாட்டு வீரர்கள் தவறாக நடத்தப்பட்டதற்கு நான் மிகவும் வருந்துகிறேன்’’- என்று ஜூம் மூலம் நடைபெற்ற யுனைட்டெட் ஸ்டேட்ஸ் பயத்லான் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தின் போது தெரிவித்த பொதுச் செயலாளர் துஷ்பிரயோக சம்பவங்களைப் பற்றிப் பேச முன்வந்தவர்களின் தைரியத்தையும் அவர் பாராட்டினார். அவர்களின் செயல்களை ‘‘நம்பமுடியாத அளவுக்கு துணிச்சலானது, முக்கியமானது’’- என்றார்.



# மூன்று வீரர்களை இழந்த ஹாட்ஸ்பர்ஸ் அணி

டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் வீரர்களான மிக்கி வான் டி வென், கிறிஸ்டியன் ரொமேரோ, ரிச்சர்லிசன் ஆகியோர் காயத்திலிருந்து புதிய ஆண்டு வரை திரும்ப வாய்ப்பில்லையென்று பயிற்சியாளர் அங்கே போஸ்டெகோக்லோ புதன்கிழமை தெரிவித்தார்.

கடந்த மாதம் ஆஸ்டன் வில்லாவுக்கு எதிராக ஸ்பர்ஸ் 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றபோது ரிச்சர்லிசன் தொடை தசையில் காயமடைந்தார். அதேசமயம், செல்சியாவிடம் 4-3 என்ற கணக்கில் தோல்வியடைந்தபோது காயம் குணமடைந்த பிறகு திரும்பிய வான் டி வென், ரோமெரோ புதிய காயங்கள் காரணமாக இடையில் வெளியேறினர்.

ஸ்பர்ஸ் இந்த மாதம் வியாழன் அன்று மான்செஸ்டர் யுனைட்டெட் அணிக்கு எதிராக நடக்கும் லீக் கிண்ண காலிறுதி உட்பட நான்கு பிரீமியர் லீக் ஆட்டங்களில் சொந்த மண்ணில் விளையாடுகிறது.

‘‘வான் டி வென், ரோமெரோ ஆகிய இருவரும் புதிய ஆண்டில் மீண்டும் வருவார்கள் என்று நான் நினைக்கிறேன்’’ - இவ்வாறு போஸ்டெகோக்லோ செய்தியாளர்களிடம் கூறினார்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7